# தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (தேபோஆ)


முகவரி

241, பூங்கா வீதி,
கொழும்பு 05

**இணையத்தளம்**

www.ntc.gov.lk

**மின் அஞ்சல்**

info@ntc.gov.lk

**துரித அழைப்பு**

1955

கௌரவ தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர்,

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு,

இல 34, நாரஹேன்பிட்டி வீதி,

நாவலை.

**<u>ஆண்டறிக்கை – 2013</u>**

1971இன் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14 (2) பிரிவின் நியதிகளின் படியும் அரசாங்கத் தொழில் முயற்சிகளின் நல்லாட்சிக்கான வழிகாட்டல்களின் அத்தியாயங்கள் 05 மற்றும் 06 இன் படியும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31ஆந் திகதி முடிவுற்ற ஆண்டிற்கான ஆண்டறிக்கை செயலாற்றுகை அறிக்கை, வருடாந்த கணக்குகள் அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை மிகவும் மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

ரேணுக்க துஷ்யந்த பெரேரா,

தலைவர்,

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

| உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|
| ஆணைக்குழுவின் அங்கத்தவர் குழு | 01 |
| தலைவரின் செய்தி | 03 |
| மொத்தப் பகுப்பாய்வு | 05 |
| செயலாற்றுகை | 07 |
| வருடாந்த கணக்குகள் | 27 |
| கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 41 |

## ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்

### 2013 ஜனவரி தொடக்கம் 2013 பெப்ரவரி வரை

| | | |
|---|---|---|
| 1. | திரு றொஷான் குணவர்தன | -தலைவர் |
| 2. | திரு. கே. புத்ததாச (செயற்படு பணிப்பாளர்) | -உறுப்பினர் |
| 3. | திரு. ஏ. பொடிராளஹாமி<br>(தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு) | - உறுப்பினர்<br>பதவிவழி |
| 4. | திருமதி சேபாலி ரூப்பசிங்க<br>(நிதி, திட்டமிடல் அமைச்சு) | -உறுப்பினர்<br>பதவிவழி |
| 5. | திருமதி டப்ளியூ. ஜீ. சந்திரிக்கா<br>(நிதி, திட்டமிடல் அமைச்சு) | - உறுப்பினர்<br>பதவிவழி |
| 6. | திருமதி யூ.எல். ஜயந்தி டி சில்வா | -உறுப்பினர் |
| 7. | திரு. கே.டி.கே. திலக்கரத்ன | உறுப்பினர் |

### 2013 மார்ச் முதல் 2013 ஜூன் வரை

| | | |
|---|---|---|
| 1. | திரு றொஷான் குணவர்தன | -தலைவர் |
| 2. | திரு. கே. புத்ததாச (செயற்படு பணிப்பாளர்) | -உறுப்பினர் |
| 3. | திரு. ஏ. பொடிராளஹாமி<br>(தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு) | - உறுப்பினர்<br>பதவிவழி |
| 4. | திருமதி சேபாலி ரூப்பசிங்க<br>(நிதி, திட்டமிடல் அமைச்சு) | -உறுப்பினர்<br>பதவிவழி |
| 5. | திரு. டி.எம்.டி. திசாநாயக்க | - உறுப்பினர் |
| 6. | திரு. டி.எஸ். விஜேசிங்க | -உறுப்பினர் |
| 7. | திரு. ஆர்.எம்.எஸ்.பி.கே. ரத்னாயக்க | உறுப்பினர் |

## 2013 ஜூலை முதல் 2013 திசெம்பர் வரை

| | | |
|---|---|---|
| 1. | திரு றொஷான் குணவர்தன | -தலைவர் |
| 2. | திரு. கே. புத்ததாச (செயற்படு பணிப்பாளர்) | -உறுப்பினர் |
| 3. | திரு. ஏ. பொடிராாளஹாமி | - உறுப்பினர் |
| | (தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சு) | பதவிவழி |
| 4. | திரு. டப்ளியூ.ஆர். கிரிஷாந்த<br>(நிதி, திட்டமிடல் அமைச்சு) | -உறுப்பினர்<br>பதவிவழி |
| 5. | திருமதி. டீ.சீ.டப்ளியூ. ஹப்புகொட<br>(நிதி, திட்டமிடல் அமைச்சு) | -உறுப்பினர்<br>பதவிவழி |
| 6. | திரு. டீ.எம்.டீ. திசானாயக்க | - உறுப்பினர் |
| 7. | திரு. டீ.எஸ். விஜேசிங்க | -உறுப்பினர் |
| 8. | திரு. ஆர்.எம்.எஸ்.பி.கே. ரத்னாயக்க | உறுப்பினர் |

# தலைவரின் செய்தி



தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வருடாந்தம் வெளியிடும் ஆண்டறிக்கைக்கு 2013ஆம் ஆண்டிற்கும் தற்போதைய தலைவர் என்ற ரீதியில் செய்தியொன்றினை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது நாட்டிலுள்ள முழு மொத்தப் போக்குவரத்துத் தொகுதியையும் முறையாக முகாமை செய்து இலங்கை மக்களுக்கு தரம் மிக்க பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையினைப் பெற்றுக் கொடுப்பதே எமது நிறுவனத்தின் முதன்மைமிகு பொறுப்பு என நான் கருதுகின்றேன்.

தற்காலத்தில் எமது நாடு துரித அபிவிருத்தி பாதையில் நடை போட்டுக்கொண்டிருப்பதுடன், அவ்வபிவிருத்தியில் செய்றபடு பங்களிப்போரான உழைப்பாளி அணியினருக்கு தரம்மிக்கதும் மிகப் பாதுகாப்பானதுமான போக்குவரத்துச் சேவையொன்றினை வழங்குதல், எதிர்காலத்தைப் பொறுப்பேற்கக் காத்திருக்கும் தேசிய சொத்தான எமது இளந்தலைமுறையினருக்கு சிசு செரிய சேவை மூலம் சிறந்த போக்குவரத்துச சேவையினை வழங்குதல், கிராமிய மக்களுக்கு கெமி செரிய சேவையையும் இரவு வேளையில் பயணிக்கும் மக்களுக்காக நிசி செரிய சேவையையும் வழங்குதல் கடந்த வருடத்தில் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டுள்ளன.

அவ்வாறே எதிர்கால இளந்தலைமுறையினரைப் பாதுகாப்பாக நாட்டுக்கு வழங்குவதற்கு வீதிப் பாதுகாப்பு தொடர்பில் விழிப்பூட்டும் செயலமர்வுகள் நாடு முழுதும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. 1978ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தனியார் போக்குவரத்துச் சேவை விஞ்ஞான ரீதியான முறைமைகளின் அடிப்படையில் சரியான முறையில் முகாமை செய்வதற்கு எமது நிறுவனம் கொண்டிருக்கும் மனித வளம் போக்குவரத்துத் துறையில் உள்ள மாபெரும் கொடையாகும் . அவ்வளங்களைப் பயன்படுத்தி GPS தொழில்நுட்பத்தினூடாக சரியான பாதையையும் சரியான நேர அட்டவணைப் படி ஏறத்தாழ 75% ஆன பேருந்துத் தொகையினை இதுவரையில் முகாமை செய்வதற்கு இயன்றமை எமது நிறுவனத்திற்கு கிடைத்த பெரும் வெற்றியாகும்.

மிகக் குறுகிய காலத்தில் பாதுகாப்பாக தமது பயணமுடிவிடத்தை நோக்கிச் செல்வதற்கு தரம் மிக்க சேவையொன்றினை வழங்குவதற்கும், விஞ்ஞான ரீதியான முறைமைகளைப் பயன்படுத்திச் செய்யப்படும் ஆய்வுகளினூடாக சரியான தரவுகளைக் கொண்டு தரம்மிக்க போக்குவரத்துச் சேவையினை வழங்குவதற்கும் எடுக்கும் முயற்சியில் தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் கௌரவ சீ.பீ. ரத்னாய்க்க அவர்களுக்கும், அவ்வமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன அவர்களுக்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்படு பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் சபைக்கும் பதில் பணிப்பாளர் நாயகம் அவர்கள் உட்பட அனைத்து அலுவலர்களுக்கும் தனியார் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் அவர்களது ஊழியர்களுக்கும், பேருந்துக் கம்பனிகள் மற்றும் போக்குவரத்துத் துறை தொடர்பிலான ஏனைய தன்னார்வ அமைப்புக்களுக்கும், வெளிவாரியாக ஆலோசனைகளை வழங்கும் மற்றும் வழிகாட்டும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உட்பட்ட கல்விமான்களுக்கும் குறைப்பாடுகள் மற்றும் சரியான பாதையினைக் காட்டிக் கொடுக்கும் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ரேணுக்க துஷ்யந்த பெரேரா,**

**தலைவர்,**

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

## மொத்தப் பகுப்பாய்வு

## நோக்கு

*நாட்டினுள் சமூக-பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக தரமிக்க, ஆகுசெலவு விளைபயன்மிக்க மற்றும் பாதுகாப்புமிக்க ஒன்றிணைக்கப்பட்ட போக்குவரத்துக் கட்டமைப்பு மற்றும் சேவை ஆகியவற்றின் மூலம் இலங்கையின் எல்லா குடிமக்களினதும் பல்வேறுபட்ட போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்திசெய்தலை உறுதிப்படுத்துதல்.*

## பணி

*பயணிகள் போக்குவரத்து தொடர்பான தேசிய கொள்கைக் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றும் திறன்மிகு பஸ் போக்குவரத்து முறைமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஒழுங்குபடுத்தற் சட்டகத்தை உருவாக்குதல்*

## <u>எமது இலக்குகளும் /குறிக்கோள்களும்</u>

- பேருந்துச் சேவையின் அபிவிருத்தி நடவடிக்கைகளை தரம் மிக்கதாகவும் போதிய அளவானதாகவும் உயர் மட்டத்தில் தொடர்ந்தும் பேணுதல்.
- வினைத்திறன்மிக்க போக்குவரத்து முறைமை ஒன்றினை அபிவிருத்தி செய்தல்
- பொதுமக்கள் தங்களுக்கு மிகவும் பொருத்தமான பேருந்துச் சேவையைத் தெரிவு செய்வதற்கு உதவும் விதத்தில் போக்குவரத்து முறைமை ஒன்றை அபிவிருத்தி செய்தல்
- பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள செயற்பாட்டாளர்களின் உறுதிப்பாடு மற்றும் நிலைப்பாட்டினை உறுதி செய்தல்
- குறைந்த வருமானம் ஈட்டும் ஆனால் சமூக ரீதியில் பேருந்துச் சேவை அவசியமான கிராமப்புற மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பிரதேசங்களுக்கான பேருந்துச் சேவைகளுக்கு நிதி உதவி அளித்தல்
- பயணிகள் போக்குவரத்துப் பேருந்துச் சேவைகள் மூலம் ஏற்படும் சுற்றாடல் பாதிப்பைத் தடுப்பதற்கான ஒரு வழிமுறையினைத் திட்டமிட்டு அதனை அபிவிருத்தி செய்தல்
- பேருந்து இயங்கும் நேரத்தை ஒழுங்கமைப்பதன் மூலம் பேருந்துகளின் விளைபயனை அதிகரித்தல்
- பேருந்துகளை இயக்கும் வேளையில் பாதுகாப்பையும் ஒழுங்கையும் உறுதி செய்தல்
- மாகாணங்களுக்கிடையில் மற்றும் மாகாணச் சேவையில் ஈடுபடும் பேருந்து சேவைகளின் இயக்கமுறைமைகளை ஒருங்கிணைத்தல்
- நாட்டின் மொத்த உழைப்புத் திறனை மேம்படுத்துதல்

## ஆணைக்குழுவின் அமைவு

ஆணைக்குழு மூன்று பதவிவழி அங்கத்தவர்களையும் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தனியார் போக்குவரத்து அமைச்சரினால் நியமிக்கப்பட்ட மேலும் ஐந்து அங்கத்தவர்களையும் கொண்டுள்ளது. ஆணைக்குழு ஒழுங்குசார் கட்டமைப்பு தலைவர், பணிப்பாளர் நாயகம் மற்றும் திட்டமிடல், இயக்கம் மற்றும் சேவைகள் கண்காணிப்பு, தர உறுதிப்பாடு, வெளியார் தொடர்பு, நிதி மற்றும் கொள்ளவனவு ஆகிய 4 திணைக்களங்களுக்குப் பொறுப்பாகச் செயற்படும் பணிப்பாளர்கள் நால்வரையும் கொண்டது.

2013ஆம் ஆண்டின் இறுதியில் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 198 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபட்டுள்ள நிரந்தரப் பணியாளர்களின் எண்ணிக்கை 137 ஆகும்.

**2013.12.31 ஆந் திகதியன்று இருந்தவாறான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் ஊழியர் எண்ணிக்கை**

| பணியாளர் தொகுதி | அங்கீகரிக்கப்பட்ட பணியணி | சேவையில் ஈடுபட்டிருந்த பதவியணியினர் |
|---|---|---|
| PL - 1 | 14 | 10 |
| PL - 3 | 13 | 13 |
| MA- 1.1 | 90 | 55 |
| MA- 2.1 | 03 | - |
| MA- 4 | 52 | 42 |
| MA- 5.3 | - | - |
| JM - 1.1 | 04 | 10 |
| MM - 1.1 | 17 | 04 |
| HM - 1.1 | 04 | 02 |
| HM- 2.1 | 01 | 01 |
| மொத்தம் | 198 | 137 |

மூலம்- நிர்வாகத் திணைக்களம் -தேபோஆ

## 2013ஆம் அண்டிற்கான செயலாற்றுகை

### 01. சமூகத் தேவைகளை முதன்மைப் படுத்திய பேருந்துச் சேவைகளுக்கான பங்களிப்பு

மக்களின் சமூக மற்றும் பொருளாதார தேவைகளை நிறைவேற்றும் நோக்குடன், வினைத்திறன்மிக்க பொதுப் பேருந்துச் சேவையொன்றை வழங்கும் நோக்கில், பொதுப் பயணிகள் பேருந்துச் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. பாடசாலை பிள்ளைகளுக்காக சிசு செரிய பாடசாலைப் பேருந்துச் சேவை, கெமி செரிய பேருந்துச் சேவை மற்றும் நிசி செரிய இரவு நேரப் பேருந்துச் சேவையை முறையாகப் பேணுவதற்கு நிசி செரிய இரவு நேரப் பேருந்துச் சேவை என்பன மேற்படி நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக நிதியுதவி பெற்றுக் கொடுக்கும் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சேவைகள் ஆகும். இதற்காக அரச மற்றும் தனியார் ஆகிய பிரிவுகளில் பேருந்து ஓட்டுனர்களின் பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படுகிறது. வியாபார நோக்கத்தினை இரண்டாவதாகக் கொண்டு சமூக சேவையினை முற்படுத்திய சேவையாக இச்செயற்றிட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

### 1.1 பாடசாலைப் பேருந்துச் சேவை செயற்றிட்டம் - ''சிசு செரிய''

பாடசாலை மாணவர்க்காகவே ஒதுக்கப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணமாக, உயர்ந்த செலவினை மேற்கொண்டேனும் வேறு மாற்றீடாக தமது பிள்ளைகளின் போக்குவரத்திற்கு வேன் வண்டிகளை ஈடுபடுத்தும் நிலைக்கு பெரும்பாலான பெற்றோர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக் கொழும்புப் பாதைகளில் போன்றே நாடு முழுதும் உள்ள நகர்ப்புற பிரதேசங்களில் பாதைகளில் கடும் வாகன நெருக்கடி ஏற்பட்டது. மேலும், காலையில் பாடசாலைகளுக்கு வரும் வேன்கள் பாடசாலை முடிவடையும் வரை நிறுத்திவைப்பதற்கு தரிப்பிட வசதிகள் முறையாக இல்லாமையால், பாடசாலைகளுக்கு அருகில் வாகன நெருக்கடியினை உருவாகுதல் பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.




அரச அனுசரணையுடன் நாட்டின் எல்லா நகரங்களையும் மையப்படுத்திய வீதிகள் மற்றும் பாடசாலைகளை உள்ளடக்குவதாக சலுகைக் கட்டண முறை அடிப்படையில் முறையாக நம்பிக்கைமிகு பாதுகாப்பான பாடசாலைச் சிறார்களுக்காவே ஒதுக்கப்பட்ட நிரந்தரமான பேருந்துச் சேவையொன்றை இபோச மற்றும் தனியார் பேருந்துகளைப் பயன்படுத்தி சிசு செரிய என்ற பெயரில் நாடு முழுதும் செயற்படுத்தப்படுகின்றது.

நம்பிக்கைமிகு சேவை என்பதால், பள்ளிக்கூட பிள்ளைகள் நேரத்துக்கு பாடசாலைக்கு சென்று உள ரீதியாக எவ்வித இடைஞ்சலுமின்றி கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டு, பாதுகாப்பாக வீடு திரும்பக்கூடிய சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் சமூகத்திற்கு நல்லதொரு இளஞ் சந்ததியினை அளிப்பதே இச்செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். அவ்வாறே, சலுகைக் கட்டண முறை நடைமுறைப்படுத்தப்படுவதால், குடும்பங்களின் பொருளாதார இடரைத் தணித்தல், சிறிய பல வாகனங்களுக்குப் பதிலாக பெரிய பேருந்துகளை ஈடுபடுத்துவதால் எரிபொருள் பாவனையைக் குறைத்தல் மற்றும் அந்நியச் செலாவணியைச் சேமித்தல், வீதிகளில் காணப்படும் வாகன நெருக்கடியினைக் குறைத்துக் கொள்வதன் மூலம் ஓடும் நேரத்தினைக் குறைத்துக் கொள்ளுதல் மற்றும் சூழல் மாசுபடுதலைத் தவிர்த்தல், அரசாங்கத் துறையினது போலவே தனியார் துறையினதும் பேருந்துச் சேவைகளை தேசிய சேவையில் ஈடுபடுத்துதல் போன்றன இதன் ஏனைய குறிக்கோள்களாகும். இப்பாடசாலைப் பேருந்துகளில் பாடசாலை மாணவர்களிடமிருந்து சாதாரண கட்டணத்தின் 50% வீதம் சலுகைக் கட்டணமாக அறவிடப்பட்டு அவர்களுக்கு போக்குவரத்து வசதியினை அளிப்பதனால், பேருந்துச் செயற்பாட்டாளருக்கு ஏற்படும் இழப்பினைக் குறைக்கும் நோக்கில் ஒரு கிலோமீற்றருக்கு இணங்கப்பட்ட மானியத் தொகையொன்றைச் செலுத்துவதன் மூலமே இச்சேவை செயற்படுத்தப்படுகின்றது.

மீளாய்வு ஆண்டுக் காலத்தின் போது இதன் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 440.38 மில்லியன் ரூபா ஆகும். 2013ஆம் ஆண்டு இறுதியாகையில் கீழ்கண்டவாறு சிசு செரிய சேவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| **மாகாணம்** | **சிசு செரிய பேருந்துகளின் எண்ணிக்கை** |
|---|---|
| மேல் | 298 |
| தென் | 111 |
| வடமேல் | 237 |
| வடமத்திய | 131 |
| சப்பிரகமுவா | 122 |
| ஊவா | 67 |
| கிழக்கு | 101 |
| மத்திய | 35 |
| வட | 23 |
| மாகாணங்களுக்கு இடையில் | 10 |
| **மொத்தம்** | **1135** |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

## 1.2 கிராமப்புற மற்றும் இலாபகரமற்ற பாதைகளுக்கான பேருந்துச் சேவைச் செயற்றிட்டம் - 'கெமி செரிய'






கெமி செரிய செயற்றிட்டத்தின் கீழ் போக்குவரத்துச் சேவை கிராமங்களையும் நகரங்களையும் தொடர்புபடுத்தும் ஊடகமாக செயற்படுகின்றது. கிராமிய மக்களின் அன்றாட தேவைகளுக்காக நகரத்திற்கு வருகைத் தர நம்பிக்கையானதும் பொருளாதார ரீதியாக இலாபகரமானதுமான போக்குவரத்து சேவையினை வழங்குவதே கெமி செரிய கிராமியப் பேருந்துச் சேவை செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

உறுதியான வழிமுறையின் மூலம் உண்மையான பொருளாதார இலாபமற்ற பாதைகள் இனங்காணப்பட்டுள்ளதுடன், அப்பாதைகளுக்கான சேவையினை வழங்கும் ஓட்டுனர்களுக்கு பொருளாதார இலாபமற்ற தூரத்திற்கு ஒரு கிலோமீற்றருக்கு கூடியளவு 31 ரூபா வீதம் ஏற்பாடுகளை வழங்குதல் இச்செயற்றிட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

2013ஆம் ஆண்டின் இறுதியில் 37 கெமி செரிய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், 31 செயற்படுத்தப்பட்டன. வருடத்தினுள் இதன் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 8.35 மில்லியன் ரூபா ஆகும்.

இங்கு சேவை வழங்குநர்களைத் திறந்த கேள்விமனு படிமுறை மூலம் தெரிவு செய்வதுடன், குறைந்தளவு தொகையினைக் கோருவோருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இச்சேவைகள் நாட்டில் வடமத்திய, கிழக்கு, தென் ஆகிய மாகாணங்களைத் தொடர்புபடுத்தி செயற்படுத்தப்படுவதுடன், ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் கேள்வியின் படி சேவைகள் வழங்கப்பட்டுள்ளன.

இச்சேவைகள் வழங்கும் பாதைகளில் வேறு எவ்வித பயணிகள் போக்குவரத்துச் சேவையும் இல்லாததுடன், ஒரே ஒரு சேவை இதுவாகும். அதனால், இதனைச் செயற்படுத்தவது அத்தியாவசியமாவதுடன், அதன் செயற்பாடு தொடர்பிலான கண்காணிப்பிற்கு எல்லா பேருந்துகளிலும்

GPS கருவியொன்று பொருத்தப்பட்டுள்ளதுடன், அதனூடாகக் கண்காணித்து ஏற்பாடுகள் கொடுப்பனவு செய்யப்படும்.

## 1.3 இரவு நேர பேருந்து சேவை செயற்றிட்டம் - "நிசி செரிய"




இரவு வேளையிலும் அதிகாலை வேளைகளிலும் பேருந்துச் சேவைகளில் காணப்படும் பற்றாக்குறையினால் பயணிகள் முகங்கொடுக்கும் அசௌகரியங்களை இல்லாதொழித்து அவர்களுக்கு பொதுப் போக்குவரத்துச் சேவையினைப் பெற்றுக் கொடுப்பதே நிசி செரிய செயற்றிட்டம் ஆரம்பிப்பதற்கான முக்கிய குறிக்கோளாகும். வருடத்தினுள் இதன் தொடர்பில் செலவிடப்பட்ட தொகை 10.16 மில்லியன் ரூபா ஆகும். 2013ஆம் ஆண்டின் இறுதியில் செயற்படுத்தப்பட்ட சேவைகள் 136 ஆகும்.

| மாகாணம் | சேவைகளின் எண்ணிக்கை |
|---|---|
| மேல் | 48 |
| தென் | 18 |
| ஊவா | 08 |
| மத்திய | 38 |
| வடமத்திய | 06 |
| வடமேல் | 10 |
| சப்பிரகமுவா | 03 |
| கிழக்கு | 05 |
| மொத்தம் | 136 |

மூலம்- திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

### 1.4 பாடசாலை மாணவர்களுக்கு மிதிவண்டிகளை வழங்குதல்

சுற்றாடல் நேயமிகு மற்றும் கிராமிய பொருளாதாரத்திற்கு ஒத்துப் போகும் போக்குவரத்து ஊடகமாக மிதிவண்டியினை அறிமுகப்படுத்தும் நோக்கில் சிசு செரிய செயற்றிட்டத்தின் கீழ் கிராமிய பிரதேசங்களில் பாடசாலைச் சிறார்களுக்கு இலவசமாக மிதிவண்டிக்கைளப் பெற்றுக்கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாபெரும் சமூக சேவையாகும். இச்சேவையின் கீழ் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்து வசதிகள் உள்ள மற்றும் சிசு செரிய பேருந்து போக்குவரத்து கடினமான கிராமிய பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்காக இம்மிதிவண்டிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.



இச்செயற்றிட்டம் வேறு போக்குவரத்து வசதிகளை வழங்க முடியாத பிரதேசங்களில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து ஊடகமாகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2013ஆம் ஆண்டின் போது 3050 மிதிவண்டிகள் பாடசாலைச் சிறார்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன், இதற்காக செலவிடப்பட்ட தொகை 28.28 மில்லியன் ரூபா ஆகும்.

## 02. நேர அட்டவணைகளைத் தயாரித்தல் மற்றும் திருத்தி அமைத்தல்

எல்லா பேருந்து ஓட்டுனர்களுக்கும் சம சந்தர்ப்பத்தினை வழங்கும் விதத்தில் பயண நேர அட்டவணைகளைத் தயாரித்து, ஓட்டுனர்களின் வியாபார நிலைப்பாட்டினைப் பாதுகாப்பதும் அதன் மூலம் பயணிக்கும் மக்களுக்கு நம்பகமானதும் பாதுகாப்பானதுமான உயர் தரமிக்க பொதுப் பேருந்துச் சேவையினை வழங்குவதும் இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இதற்கு மேலதிகமாக, அரச மற்றும் தனியார் பிரிவின் பேருந்து ஓட்டுனர்களுக்கு இடையிலான பாதகமான போட்டித் தன்மையினைக் குறைத்து, பேருந்து ஒன்று சாதாரணமாக ஒரு நாளைக்கு ஓடும் கிலோ மீற்றர் அளவினை உச்சப்படுத்துவதும் இச்செயற்றிட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களில் முக்கியமானவையாகும்.

மாகாணங்களுக்கு இடையிலான 454 பேருந்துச் சேவைகளுக்காக ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த ஒன்றிணைக்கப்பட்ட நேர அட்டவணைகளைச் செயற்படுத்துதல் 2013ஆத் ஆண்டின் இலக்காக இருந்ததுடன், அந்நேர அட்டவணைகளைச் செயற்படுத்துவதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை (இபோச வின் இணக்கம், கணினி வசதிகள்) வழங்குதல் இவ்வருடத்தில் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டின் போது இதற்காகச் செலவிடப்பட்ட தொகை 0.71 மில்லியன் ரூபாவாகும்.

## 03. வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள்

வீதி விபத்துக்கள் அதிகரிக்கின்றமை நாட்டின் மொத்த பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் விடயமாக இருப்பதுடன், வீதி விபத்துக்கள் கணிசமான அளவில் சாரதிகளின் மற்றும் பாதசாரிகளின் கவனயீனத்தினாலேயே ஏற்படுவதாக வீதி விபத்துக்கள் தொடர்பிலான தரவுகள் மற்றும் புள்ளிவிபரங்களை ஆய்வு செய்யும் போது புலனாகின்றது. இது சமூக ரீதியான பல பிரச்சினைகளுக்கு ஏதுவாகும் விடயமாகும்.

மாண்புமிகு ஜனாதிபதி அவர்களால் 2011 – 2020 வரையான தசாப்த காலத்தை வீதிப் பாதுகாப்புக்கான காலமாகப் பிரகடனப்படுத்தியுள்ளதுடன், வாகன விபத்துக்களைக் குறைத்துக்கொள்வதற்கு உரிய எல்லா நிறுவனங்களும் செயற்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்.

வீதி விபத்துக்கள் அதிகரிக்கின்றமை நாட்டின் மொத்த பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தும் விடயமாக இருப்பதுடன், ஒழுங்கமைப்பு நிறுவனமாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வீதி விபத்துக்களைத் தடுத்துக் கொள்வதற்காக கடுமையாகச் செயற்படவேண்டியது காலத்தின் தேவை என்பதால், வீதிப் பாதுகாப்பு குறித்து விழிப்பூட்டல் நிகழ்ச்சிகள் 2013ஆம் ஆண்டினுள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. விசேடமாக மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சாரதிகள் வீதிப் பாதுகாப்பு குறித்து அறிவூட்டப்படுவதன் மூலம் அச்சேவை சார்பான வாகன விபத்துக்கள்ளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதும் பேருந்து சாரதிகளுடன் முச்சக்கர வண்டி சாரதிகள், பாடசாலை வேன் வண்டி சாரதிகள், அரசாங்க நிறுவனங்களின் சாரதிகள் ஆகியோரைப் பங்குபெறச் செய்த நாடளாவிய ரீதியில் மாவட்ட மட்டத்தில் வீதிப் பாதுகாப்பு செயலமர்வுகளை நடாத்துவதன் மூலம் சமூகத்தினை விழிப்பூட்டல் இச்செயற்றிட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. 2013ஆம் ஆண்டில் வீதிப் பாதுகாப்பு குறித்து 12 செயலமர்வுகளை நடாத்துவதன் மூலம் ஏறத்தாழ 2000 சாரதிகள், நடத்துனர்கள், பேருந்து உரிமையாளர்கள் ஆகியோரை அறிவூட்டியுள்ளதுடன், 1155க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களும் அறிவூட்டப்பட்டனர். 2013 ஆம் ஆண்டில் வீதி விபத்துக்கள் தொடர்பில் தரவுப் பகுப்பாய்வின் போது தனியார் பேருந்துகளில் பயணிக்கும் பயணிகள் உயிரிழந்துள்ளமை 2011ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் துரிதகதியில் குறைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் மொத்த உயிர்ச்சேத விபத்துக்களில் 3.1% தனியார் பேருந்துகளில் பயணித்த பயணிகள் என்பதுடன் அது 2013ஆம் ஆண்டின் போது 2.4% வரை குறைந்துள்ளது. இதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2011ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்ட விழிப்பூட்டல் நிகழ்ச்சித் தொடர் பங்களிப்புச் செய்துள்ளது. வருடத்தினுள் இதற்காகக் செலவிடப்பட்ட தொகை 15.1 மில்லியன் ரூபாவாகும்.

## 04 பொதுப் போக்குவரத்திற்காக நவீன தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட ஜீ.பீ.எஸ். (GPS) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் புது ஒழுங்குபடுத்தற் முறை




பொதுப் போக்குவரத்துத் துறையில் எழுந்துள்ள சவால்மிக்க பிரச்சினைகளைத் தீர்க்கும் அடிப்படையில், தரம் மிக்கதும் பாதுகாப்பானதுமான போக்குவரத்துச் சேவையினை நிறுவும் பொருட்டு தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினைப் பொதுப் போக்குவரத்துச் சேவையில் பயன்படுத்தும் விதத்தில் ஜீ.பீ.எஸ். தொழிநுட்பத்தை மற்றும் ஏனைய தொழில்நுட்ப முறைகளைப் பிரயோகித்து மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளை ஒழுங்குபடுத்துதல் முதன்முதலாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது.

அதன் கீழ் 2013ஆம் ஆண்டினுள் குறித்த ஜீ.பி.எஸ். தொழில்நுட்பமயமாக்கல் துரிதப்படுத்தப்பட்டு மாகாணங்களுக்கு இடையிலான 1667 பேருந்துகளுக்கு ஜீ.பி.எஸ். தொழில்நுட்பத்தினை நிறுவ முடிந்துள்ளது.

இத்தொழில்நுட்பத்தினூடாக பிரதானமாக கூடிய வேகத்தில் ஓடும் பேருந்துகளின் வேகத்தினைக் கட்டுப்படுத்தி எச்சரிக்கை சமிக்ஞை ஒன்று பேருந்தினுள் ஒலிப்பதுடன் அதற்கு இணைவாக காட்டுப்பாட்டு அறையில் அது தொடர்பில் குறிக்கப்படுவதாலும் இது வரையில் ஜீ.பி.எஸ். தொழில்நுட்பம் பொருத்தப்பட்டுள்ள பல பேருந்துகள் கூடிய வேகத்துடன் செல்வதைக் கட்டுப்படுத்தியுள்ளன.

ஏற்கனவே செயற்படும் ஒழுங்கமைப்பு முறைமையினை விஸ்தரித்து பொது மக்கள் முறைப்பாடுகள் அலகுடன் இணைக்கப்பட்டுள்ள துரித தொலைபேசி அழைப்புப் பிரிவுடன் ஒன்றிணைந்து அதற்கு கிடைக்கும் முறைப்பாடுகளை உடனடியாகத் தீர்ப்பதற்கும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நோக்காகக் கொண்டு ஒழுங்கமைப்பு நிலையத்தினை விஸ்தரிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன், அதனை எதிர்வரும் ஆண்டினுள் செயற்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அவ்வாறே பயணிக்கும் மக்களுக்கு விளைபயன்மிக்கதாக அவர்களுக்கு தேவையான பேருந்தினை உடனடியாக குறுந்தகவல் சேவையினூடாக மற்றும் அன்ட்றொயிட் மென்பொருள் மூலமாக அறிந்துகொள்வதற்கு முடியுமாகும் விதத்தில் மென்பொருளை மேம்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், அதனை எதிர்வரும் ஆண்டில் செயற்படுத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதனூடாக எல்லா போக்குவரத்து ஊடகங்களையும் ஒருங்கிணைத்து சரியான தகவல் தொகுதியொன்றினை நிறுவுவதன் மூலம் பொதுப் போக்குவரத்தின் தரத்தினை மேம்படுத்தவதற்கு எதிர்வரும் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் மாகாண பேருந்துகள் போன்றே இபோச பேருந்துகளுக்கும் இத்தொழில்நுட்ப முறைமைகளை அறிமுகப்படுத்தி செயற்படுத்தவதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட தொகை 72.92 மில்லியன் ரூபாவாகும்.

## 05. தனியார் பேருந்துச் சேவைகளை மீளமைத்தல்

### 5.1 பேருந்துக் கம்பனிகளை நிறுவுதல்

அரச கொள்கையின் பிரகாரம் தற்போது காணப்படும் பயணிகள் போக்குவரத்துச் சேவையினை தரம்மிக்கதும் நம்பிக்கைமிக்கதுமான சேவையாக விருத்தி செய்து பொதுமக்களுக்கு மிகச் சிறந்த சேவையொன்றினை வழங்கும் அடிப்படை நோக்கினைக் கொண்டு போக்குவரத்தினை மீள ஒழுங்கமைத்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ் மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொண்டுள்ள பேருந்து ஓட்டுனர்களை ஒன்றுபடுத்தி நாடு முழுதும் கம்பனிகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அனுசரணையின் கீழ் 2007 இல. 7ஐக் கொண்ட கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு இடையிலான சேவைகளுக்காக வரையறுக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்து கம்பனிகளை நிறுவுதல் 2009ஆம் அண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த மீள் ஒழுங்கமைப்புச் செய்தல் மற்றும் பேருந்துக் கம்பனிகளை நிறுவுதல் செயற்பாட்டிற்கு பொருந்தும் வகையில் 1991இன் 37ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழச் சட்டம் மற்றும் 1996இன் 30ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திருத்தச் சட்டம் ஆகியன திருத்தப்பட்டு வருகின்றன. பேருந்து உரிமையாளர்களை ஒன்றுபடுத்தி அவ்வியாபாரத்தினை விருத்தி செய்து கொள்வதற்கு தேவையான அறிவுறுத்தல் மற்றும் உதவிகளை வழங்குவது மூலம் பொதுமக்களுக்கு பாதுகாப்பு மிகு நம்பிக்கைமிக்க மற்றும் தரம்மிக்க சேவையொன்றினை

வழங்குவதே இப்பேருந்துக் கம்பனிகளை நிறுவுவதன் பிரதானமானதும் அடிப்படையானதுமான நோக்கமாகும்.

தனியார் பேருந்து வர்த்தகத்தில் 95% தனியே பேருந்து ஒன்றினை உரிமையாகக்கொண்டோர் ஆவர். தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்ற வகையில் இவ்வெல்லாப் பேருந்து ஓட்டுனர்களும் ஏதேனும் பிரச்சினை ஒன்றின் போது வரவழைக்கப்படுவதற்குப் பதிலாக அவர்களது பிரதிநிதிகளான கம்பனி பணிப்பாளர் சபை அங்கத்தவர் சிலரை வரவழைப்பிப்பதற்கு முடியுமாதல் இக்கம்பனி முறை மூலம் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

2013ஆம் ஆண்டின் முடிவில 16 வரையறுக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்துக் கம்பனிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் தற்போது 14 கம்பனிகள் செயற்படு நிலைமையில் காணப்படுகின்றன. 2013ஆம் ஆண்டினுள் இதற்கு செலவிடப்பட்ட தொகை ரூபா 3.56 மில்லியனாகும்.

1. வரையறுக்கப்பட்ட பதுளை பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
2. வரையறுக்கப்பட்ட மாத்தறை பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
3. வரையறுக்கப்பட்ட கதிர்காமப் பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
4. வரையறுக்கப்பட்ட அம்பலாங்கொடை பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
5. வரையறுக்கப்பட்ட இரத்தினபுரி பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
6. வரையறுக்கப்பட்ட குருணாகலை பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
7. வரையறுக்கப்பட்ட சிலாபம் பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
8. வரையறுக்கப்பட்ட வவுனியா பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
9. வரையறுக்கப்பட்ட குருணாகலை பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
10. வரையறுக்கப்பட்ட குருணாகலை வடக்கு பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
11. வரையறுக்கப்பட்ட கண்டி - கொழும்பு பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
12. வரையறுக்கப்பட்ட காலி பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
13. வரையறுக்கப்பட்ட நுவரெலியா பயணிகள் போக்குவரத்துக் கம்பனி
14. வரையறுக்கப்பட்ட பொலொன்னறுவை பயணிகள் போக்குவரத்துக் கம்பனி

## 06. பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்குதல்

2002 ஆம் ஆண்டில் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பேருந்துக் கட்டணக் கொள்கையின் சிபாரிசுக்கமைய பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களை நீக்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது பாவனையில் இருக்கும் கட்டண அட்டவணை பொதுப் பிரமாணங்கள் மற்றும் விஞ்ஞான ரீதியான வழிமுறைகளுக்கு அமைய தயாரிக்கப்பட்டு இல்லாமையால் மற்றும் மையப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றினால் கட்டண அட்டவணை தொகுக்கப்பட்டிராமையால் கட்டண அட்டவணையில் பல்வேறு ஒழுங்கீனங்களைக் காணமுடிந்தது. அதனால், வேறுபட்ட பயணவழிகளில் சமமான தூரத்தினைக் கடக்கும் பயணிகளிடமிருந்து வேறுபட்ட கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளதுடன், ஒரே பயணவழியில் ஓடும் இ.போ.ச. மற்றும் தனியார் பேருந்துகளிலும் மாகாணங்களுக்கு இடையிலான

பேருந்துகளிலும் பல்வேறு கட்டணங்கள் அறவிடப்பட்டுள்ளன. குறிக்கப்பட்ட கட்டண அட்டவணை இல்லாமையால் பேருந்து பயணிகளுக்கும் பேருந்து ஊழியர்களுக்கும் இடையில் அடிக்கடி முரண்பாடுகள் ஏற்பட்டன.

பேருந்துப் பயணிகள் பயணிக்கும் தூரத்திற்கு ஒப்பாக கட்டணமொன்றை அறவிடும் நோக்கில் மற்றும் கட்டண சந்தர்ப்பங்களை குறிப்பிட்ட நியமங்களின் கீழ் நிறுவும் நோக்குடன் பேருந்துக் கொள்கை மூலம் கட்டண சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூர அளவு பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி, தட்டையான தரை பாதையில் கட்டண சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூரம் 2 கி.மீ. ஆகவும் மலைநாட்டுப் பாதையில் கட்டண சந்தர்ப்பமொன்றிற்கான சாதாரண தூரம் 1.7 கி.மீ. ஆகவும் நாட்டின் எல்லா பேருந்து பயணவழிகளும் அளவிடப்பட்டு கட்டண சந்தர்ப்பங்களை நிறுவுவதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. அப்பரிந்துரையினைச் செயற்படுத்தும் நோக்கில் இச்செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2011ஆம் ஆண்டு இறுதியாகையில் எல்லா மாகாணங்களுக்கு இடையிலான பாதைகள் மற்றும் மேல், மத்திய, தென், வடமேல் மாகாணங்களுக்குரிய மாகாணப் பாதைகளில் காணப்படும் ஒழுங்கீனங்களை நீக்கி, தரப்படுத்தப்பட்ட கட்டண அட்டவணைகள் செயற்படுத்தப்பட்டன.

2012ஆம் ஆண்டு முடிவடையும் போது கிழக்கு மாகாணத்திற்குரிய எல்லா பேருந்து பயண வழிகளும் அளவிடப்பட்டு 300 பாதைகளுக்கு தரப்படுத்தப்பட்ட கட்டண அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அவ்வாறே 2013ஆம் ஆண்டு இறுதியில் சபரகமுவா மாகாணத்தில் 574 பாதைகளும் ஊவா மாகாணத்தில் 480 பயண வழிகளும் அளவிடப்பட்டு பேருந்துக் கட்டண ஒழுங்கீனங்களைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் 2014ஆம் ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2013ஆம் ஆண்டினுள் இதற்காகச் செலவிடப்பட்ட தொகை 1.78 மில்லியன் ரூபாவாகும்.

## 07. பேருந்து ஊழியர் குழுவினரை பதிவுசெய்தலும் பயிற்சி அளித்தலும்

மாகாணங்களுக்கிடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள சாரதிகளுக்கும் நடத்துனர்களுக்கும் அவர்களின் சேவை தரத்தினையும் ஒழுக்க மட்டத்தினையும் மேம்படுத்துவதற்கென விசேட பயிற்சித் திட்டங்கள் இதன் கீழ் செயற்படுத்தப்பட்டன. இப்பயிற்சி நிகழ்ச்சியினை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்த ஊழியர்களுக்கான ஆளடையாள அட்டையும் இச்செயற்றிட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன. அதன்படி 2013ஆம் ஆண்டினுள் 1584 சாரதிகளுக்கும் 1372 நடத்துனர்களுக்கும் பயிற்சி நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டன. சாரதிகள்/ நடத்துனர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்துதல் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அமைய மாவட்ட மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக தேசத்தின் மகுடம் அபிவிருத்தி நிகழ்ச்சிக்கு இணைவாகப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. 2013 ஜூலை மாதம் சாரதிகளுக்கான விசேட சாரதிப் பயிற்சி நெறியும் மோட்டார் வாகனத் திணைக்களம் மற்றும் பொலிஸ் வாகனத் திணைக்களம் ஆகியன ஒன்றிணைந்து கொப்பேகடுவ பயிற்சி மத்திய நிலையத்தில் நடாத்தப்பட்டது. இவ்வாண்டினுள் இதற்காகச் செலவிடப்பட்ட தொகை 6.89 மில்லியன் ரூபாவாகும்.

## 08. பேருந்துகளைப் பௌதிக ரீதியில் பரிசீலித்தல் மற்றும் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் வழங்குதல்


பயணிகள் போக்குவரத்தில் பயன்படுத்தப்படும் பிரதான போக்குவரத்து ஊடகமான பேருந்துகளின் தரத்தினை விருத்தி செய்தலுக்கு மற்றும் பயண முடிவிடம் வரையும் பிரயாணிகளுக்கு பாதுகாப்பானதும் சௌகரியமானதுமான சேவையை வழங்கும் நோக்கில் பேருந்துகளில் ஒலி மட்டத்தையும் (noise level) ஏனைய நிபந்தனைகளையும் குறித்து (ஆசனங்களின் நீளம், அகலம், உயரம் மற்றும் இடைவெளி குறித்து) தரப் பரிசோதனையும், குறிப்பிட்ட பயிற்சி பெற்ற மற்றும் ஆணைக்குழுவில் பதிவு செய்த சாரதிகள் மற்றும் நடத்துனர்களை சேவையில் ஈடுபடுத்துதல், முறையான ரிக்கட் வழங்கும் ஆற்றல் மற்றும் ஏனைய நிபந்தனைகள் குறித்து ஆய்வு செய்தல், பகுப்பாய்தல் மற்றும் தேவையானவற்றை அமுலாக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்குப் பொருத்தமான அளவுகோல்களை அறிமுகஞ் செய்தல் இச்செயற்றிட்டத்தின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு பொதுமக்களின் போக்குவரத்துத் தேவைகளைக் கவனத்திற் கொண்டு, வெளிப்படைத்தன்மைமிக்க கேள்விப் பத்திர நடைமுறையின் கீழ் மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. 2012ஆம் ஆண்டின் இறுதியளவில் 33 வழிப்பாதைகளுக்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதன் படி 47 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 09. பொதுமக்கள் முறைப்பாடுகள்

மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துகளைப் பயன்படுத்தும் பொதுமக்களுக்கு உயர் தரமிக்க, ஒழுங்கான சேவையொன்றினை வழங்குவதற்காகவே பொதுமக்கள் முறைப்பாட்டு விசாரணைப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இது நாள் முழுதும் 24 மணி நேரமும் பயணிக்கும் மக்கள் தமது முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு முடியுமான வகையில் மேலும் விருத்தி செய்யப்பட்டுள்ளது. அதற்காகவே ஒதுக்கப்பட்டுள்ள விசேட குறி இலக்கதத்துடன் (1955) உடனடி தொலைபேசி அழைப்பு எண்ணொன்றும் (0112595555) தொலைநகல், மின் அஞ்சல் மற்றும் கடிதம் மூலமாகவும், பொதுமக்கள் ஆணைக்குழுவிற்கு வருகைத் தந்தும் பெஸ்ரியன் மாவத்தையிலுள்ள பேருந்துத் தரிப்பிட அலுவலகத்திற்கு முறைப்பாட்டினை வழங்கியும் முறைபாடுகளை முன்வைக்கலாம். இவ்வலகின் மூலம் பொதுமக்களின் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல், அது தொடர்பில் பதிவுகளை மேற்கொள்ளல், விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன செயற்படுத்தப்படுகின்றன.

**2013 ஆம் ஆண்டில் ஜனவரி 1 முதல் திசெம்பர் 31 வரை குற்றவகைப் படி கிடைத்த முறைபாடுகள்**




மூலம் - தரக்கட்டுப்பாடு மற்றும் வெளி உறவுகள் திணைக்களம் - தேபோஆ


பயணிக்கும் பொதுமக்களுக்கு வினைத்திறன்மிக்க, தரமிக்க, மற்றும் பாதுகாப்புமிகு சேவையொன்றினை வழங்குவதே பொதுமக்கள் முறைபாட்டுப் பிரிவின் முக்கிய நோக்கமாகும். இதன் கீழ் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்துச் சேவைகளுக்குரிய முறைபாடுகள் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தில் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் மாகாண சேவைகளுக்குரிய முறைபாடுகளை உரிய மாகாண அலுவலகங்களுக்கு அனுப்புவதற்கும் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இலங்கைப் போக்குவரத்துச் சபை சேவைகளுக்குரிய முறைபாடுகள் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்படும். மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் பொதுமக்கள் முறைபாட்டு பிரிவிற்கு கிடைக்கப்

பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 6421 ஆவதுடன் அவற்றில் 90% ஆனவை அதாவது 5798 முறைப்பாடுகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

## 10. நடமாடும் சோதனையிடல்கள்

1971 இல 37ஐக் கொண்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின பிரகாரம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட பேருந்திற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறுதல் குறித்து சோதனையிடல் நடமாடும் சோதனைப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படும். இதன் கீழ் பயணிகள் சேவை அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறி மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் ஓடும் பேருந்துகள் குறித்து விசாரணைப் பிரிவிற்கு அறிவிப்பதும், பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமின்றி மாகாணங்களுக்கு இடையிலான பாதைகளில் ஓடும் பேருந்துகள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவிசெய்தலும் மூலம் தரம்மிக்க பயணிகள் சேவையினை வழங்குவதற்கான பங்களிப்பை வழங்குவதும் நடமாடும் சோதனையிடல் அலகினால் நிறைவேற்றப்படுகின்றது.

2013ஆம் வருட இறுதியாகையில் 23585 பேருந்துகள் நடமாடும் சோதனைப் பிரிவினால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. 2006ஆம் ஆண்டு முதல் அவ்வவ் வருடங்களில் நடமாடும் சோதனையிடல் அலகினால் சோதனையிடப்பட்ட பேருந்துகளின் எண்ணிக்கை குறித்து கீழ்வரும் வரைபு மூலம் காட்டப்பட்டுள்ளது.





மூலம்- தரக்கட்டுப்பாடு மற்றும் வெளி உறவுகள் திணைக்களம்- தேபோஆ

2013ஆம் ஆண்டினுள் சோதனை அதிகாரிகள் நடமாடும் சோதனை நடவடிக்கைகளின் போது சோதனையிட்ட பேருந்துகளின் எண்ணிக்கையில் 5015 அளவானவை நிபந்தனைகளை மீறியுள்ளன. சோதனையிடப்பட்ட பேருந்து எண்ணிக்கையில் இது 21.3% ஆகும். மேலும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் அரசாங்கத்தின் உதவிதொகை கொண்டு செயற்படும் சிசு செரிய பாடசாலைப்

பேருந்துச் சேவை மற்றும் நிசி செரிய இரவு நேரப் பேருந்துச் சேவை என்பனவற்றையும் கண்காணிக்கும் நடவடிக்கைகளும் இப்பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

## 11. ஆய்வு




மூலம் -திட்டமிடல் திணைக்களம், தேபோஆ

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கொள்கைகளைத் தயாரிக்கும் போதும், திட்டங்களைத் தொகுக்கும் போதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான தீர்மானங்களை எடுக்கும் போதும் தேவையான தரவுகளை வழங்குவது ஆய்வுப் பிரிவின் பொறுப்பாகும். தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பொறுப்புக்களில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்தும் பயணிகள் மற்றும் பேருந்து ஓட்டனர்கள் ஆகியோர் பிரதான தரப்பினர்களாவதுடன், இவ்விரு தரப்பினர்களுடனும் நியாயமான முறையில் நடந்துகொள்ளும் பொருட்டு பொதுப் போக்குவரத்திற்காக உள்ள கேள்வி மற்றும் வழங்கல் ஆகியவற்றை அதிசிறந்த முறையில் கையாளுவதற்கு தேவையான தரவுகளைத் தொகுத்தல் ஆய்வுப் பிரிவின் முதன்மைமிகு பணியாகும். அதற்குப் பிரதானமாக பயணிகள் கேள்விகள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுவதுடன், அதன்போது காணப்படும் பயணிகள் கேள்வி மற்றும் வழங்கல் குறித்து சரியான தரவுகளை வழங்குவதன் மூலம் மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து இயக்கம் தொடர்பில் நேர அட்டவணை தயாரித்தல், திட்டங்களைத் தொகுத்தல் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறான தீர்மானங்களை எடுத்தல் ஆகியவற்றிற்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொடுத்தல் என்பன மேற்கொள்ளப்படும். 2013ஆம் ஆண்டினுள் இப்பிரிவினால் 17 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்விற்காக மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்ட மொத்த தொகை 0.81 மில்லியன் ரூபாவாகும்.

## 12. நெடுந்தூரச் சேவைகளுக்கென தரிப்பிட சமிக்ஞைகளை அமைத்துப் பராமரித்தல்






நெடுந்தூரச் சேவைப் பேருந்து மூலம் பயணத்தை மேற்கொள்ளும் பிரயாணிகளுக்குப் பாதுகாப்பானதும் நம்பிக்கையானதுமான சேவையை வழங்குவதற்கும் நெடுந்தூர பேருந்துத் தரிப்பிடங்களைப் பிரயாணிகள் எளிதில் அடையாளங் கண்டு கொள்வதற்கும் இத்திட்டம் செயற்படுத்தப்பட்டது. 2013ஆம் ஆண்டின் இறுதியில் 501 நெடுந்தூரப் பேருந்துத் தரிப்பிட சமிக்ஞைகள் அமைக்கப்பட்டன. 2013ஆம் ஆண்டினுள் நெடுந்தூரப் பயணச் சேவைகளுக்கான தரிப்பிட சமிக்ஞைப் பலகைகளை அமைப்பதற்காக செலவிடப்பட்ட தொகை 4 மில்லியன் ரூபாவாகும்.

## 13. நெடுந்தூரப் பயணச் சேவைகளுக்காக பயணிகள் கொட்டில்களை அமைத்தல்



நெடுந்தூர பயணச் சேவைகள் பிரயாணிகளின் வசதி பொருட்டு பயணிகள் கொட்டில்கள் அமைத்தல் இச்செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இச்செயற்றிட்டத்தின் கீழ் நெடுந்தூரப் பயணச் சேவைகள் பயணிகள் கொட்டில்கள் 13 இரத்தமலானை, பெந்தோட்டை, கஹவ, ஹிக்கடுவை, பூஸா, மஹமோதர, குடாவெல்ல, கபுருகமுவ, நோனாகம, பல்லேமுல்லை ஆகிய பிரதேசயங்களில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக மீளாய்வாண்டினுள் செலவிடப்பட்ட தொகை 2.4 மில்லியன் ரூபாவாகும்.

## 14. பேருந்துத் தரிப்பிடங்களை அமைத்தல்

### வவுனியா பேருந்துத் தரிப்பிடத்தை அமைத்தல்



வட மாகாணத்தின மையஸ்தலமாகக் கருத்தப்படும் வவுனியா நகரத்தினூடாகவும் நகரத்திலிருந்தும் ஆரம்பிக்கும் பேருந்துகளின் எண்ணிக்கை பாரிய அளவினதாக இருப்பினும் அப்பேருந்துகளை நிறுத்தி வைப்பதற்கு பேருந்து நிலையமொன்று இல்லாமையினால் பொதுப்பயணிகளுக்கும் பேருந்து ஓட்டுனர்களுக்கும் மட்டுமன்றி வவுனியா நகரத்தினை நிர்வகிக்கும் நிறுவனங்களுக்கும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.


பேருந்துத் தரிப்பிடங்களை அமைப்பதன் மூலம் பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் எடுக்கப்பட்டுள்ள ஒரு நடவடிக்கையாக, விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட மூன்று ஏக்கர் காணியில் வவுனியா நகரத்திற்கான பேருந்துத் தரிப்பிடத் தொகுதியொன்றினை அமைப்பதற்கான எல்லா நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

13 நெடுந்தூரப் பயணச் சேவைப் பேருந்துகளும் மாகாணத்தினுள் 21 பேருந்துகளும் என்ற வகையில் 34 பேருந்துகளை நிறுத்தும் வசதிகளுடன், அரசாங்க பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட திட்டத்தில் 800 சதுரமீற்றர் மற்றும் 1100 சதுரமீற்றர் என்றவாறு 02 கட்டடங்கள் அமைக்கப்படவுள்ளன.

மேலும், இங்கு அங்கவீனர்கள் உட்பட அனைத்து பயணிகளுக்குமான மலசலகூட வசதிகள், ஓய்வறைகள், உணவு உட்கொள்வதற்கான சிற்றுண்டிச்சாலையொன்று ஆகிய அத்தியாவசிய வசதிகள் பல உள்ளன.

இதற்காக நிதி அமைச்சினால் 110 மில்லியன் ரூபா ஏற்பாடுககள் ஒதுக்கப்பட்டுள்ளது. 104 மில்லியன் ரூபாவிற்கு கேள்விப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன், 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆந் திகதி கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

<u>**தலவாக்கலை பேருந்துத் தரிப்பிடம்**</u>




தலவாக்கலை பேருந்துத் தரிப்பிடம் -முதலாவது கட்டம்

அடிக்கடி மழையுடன் கூடிய காலநிலையைக் கொண்ட தலவாக்கலை நகரம் அபிவிருத்தி அடைந்துவரும் வர்த்தக நகரமாகும். இந்நகரத்திற்கு அண்மையில் உள்ள 10 பாடசாலைகளுக்கு ஏறக்குறைய 6000 மாணவர்கள் தினமும நகரத்திற்கு வருவதுடன், அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெரும் எண்ணிக்கையிலான ஊழியர்கள் இந்நகரத்தினூடாகப் பயணிக்கின்றனர்.

டெவோன், சென் கிளெயார்ஸ் போன்ற அழகு பொருந்திய நீர்வீழ்ச்சிகள் மற்றும் இயற்கை எழில் நிறைந்த இந்நகரத்தினூடாக தினமும் நுவரெலியா மற்றும் சிவனொளிபாதம் வரை உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப்பிரயாணிகள் பெரும் எண்ணிக்கையில் பயணிக்கின்றனர்.

வருடக் கணக்காக பேருந்துத் தரிப்பிடமொன்றின்றி மிகவும் பின்தங்கிய வாழ்க்கையினைக் கொண்டு செல்லும் பயணிகளுக்கு நகரசபையின் வேண்டுகோளுக்கு இணங்க அரசாங்க பொறியியற் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனையில் மற்றும் நிதி அமைச்சின் ஏற்பாடுகளின் கீழ் தேசிய போக்குவரத்து ஆணைக்குவினால் பேருந்துத் தரிப்பிடமொன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் முதல் கட்டமாக 450 சதுரமீற்றரைக் கொண்ட கீழ் தளம் அமைக்கப்படவுள்ளதுடன், 2013ஆம் ஆண்டில் 50%ஆன அளவு கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

இங்கு ஒரே முறையில் 08 பேருந்துகளை நிறுத்துவதற்கான வசதிகள் இருப்பதுடன், அங்கவீனர்கள் உட்பட அனைத்து பயணிகளுக்கம் மலசலகூட வசதிகளும் உண்டு. இரண்டாவது கட்டமாக முதலாவது தளம் அமைப்பதற்கும் பிண்ணிப்பிணைந்த கல் பதிப்பதற்கும் (interlock laying) உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 15. தேசிய போக்குவரத்துத் தரவுகள் சேகரிப்பு




போக்குவரத்திற்கு சம்பந்தமான கொள்கைகளைத் தயாரிப்பதில் ஈடுபடும், போக்குவரத்து தொடர்பில் திட்டங்களை வகுக்கும் நிறுவனங்களுக்கும் அதிகாரிகளுக்கும் போக்குவரத்து தொடர்பிலான பிரச்சினைகளை இனங்காணல் மற்றும் அப்பிரச்சினைகளுக்கு பொருத்தமான தீர்வுகளைப் பெறுவதற்கு தேவையான புள்ளிவிபரம் சார் தரவுகளை சேகரித்தல், வைப்பில் வைத்தல், பகுப்பாய்வு செய்தலே இச்செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இச்செயற்றிட்டம் 2010 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் கீழ் போக்குவரத்து அமைச்சு, தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சு, போக்குவரத்துடன் தொடர்புபட்ட நிறுவனங்களிடமிருந்து தேசிய போக்குவரத்துத் தரவுகளை சேகரித்து, அத்தரவுகளைப் பகுப்பாய்வு செய்து, குறிப்பிட்ட தரவுகள் மற்றும் புள்ளி விபரங்கள் வருடாந்த அறிக்கையாக வெளியிடப்படும்.

தேசிய போக்குவரத்துத் தரவுகளைச் சேகரித்தலின் கீழ் போக்குவரத்துடன் தொடர்புடைய பின்வரும் நிறுவனங்களிடமிருந்து புள்ளிவிபரங்கள் பெறப்படுகின்றன.

1. தேசிய போக்குவரத்துச் ஆணைக்குழு
2. இலங்கைப் போக்குவரத்துச் சபை
3. வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைகள்
4. இலங்கை புகையிரதத் திணைக்களம்
5. மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்
6. தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்
7. இலங்கை மத்திய வங்கி
8. சனத்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
9. மோட்டார் வாகன பொலிஸ் தலைமையகம்
10. இலங்கை துறைமுக அதிகாரசபை
11. வீதி அபிவிருத்தி அதிகாரசபை
12. சிவில் விமான சேவை அதிகாரசபை
13. சிவில் விமான சேவை அமைச்சு
14. நெடுஞ்சாலைகள் அமைச்சு

2013ஆம் ஆண்டில் செப்தெம்பர் மாத இறுதியாகையில் 2012 போக்குவரத்து புள்ளிவிபர அறிக்கையின் 2000 பிரதிகளை அச்சிடுதல் மற்றும் போக்குவரத்துத் தொடர்பில் பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நாடு

முழுதும் உள்ள பொது நூலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றிற்கு வினியோகித்தல் முடிவுற்றுள்ளது. மேலும், 2013 ஆம் ஆண்டினுள் இவ்வறிக்கை இறுவட்டுகளில் பதிவு செய்வதற்கும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் சேர்த்துக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக இவ்வாண்டினுள் செலவிடப்பட்ட தொகை 3.0 மில்லியன் ரூபாவாகும்.

### 16. ஊழியர் பயிற்சி மற்றும் அபிவிருத்தி

2012ஆம் ஆண்டில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிக்குழாத்தினருக்கு பயிற்சி அளித்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் மூலம் ஊழியர்களின் வினைத்திறனை விருத்தி செய்யும் நோக்கில் நிறுவனத்திற்கு தேவையான பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பாடநெறிகளில் உள்நாட்டு ரீதியாகவும் வெளிநாட்டு ரீதியாகவும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். 2013ஆம் ஆண்டில் உள்ளூர்ப் பயிற்சி நிகழ்ச்சிகளில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 22 உத்தியோகத்தர்களும், 27 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சியிலும் பங்கேற்றனர். இவ்வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளுக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைகளில் பணிபுரியும் உத்தியோகத்தர்களும் பங்குபற்றப்பட்டனர். இவ்வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத் திட்டமிடல், வீதிப் பாதுகாப்பு, நகரப் போக்குவரத்து முகாமைத்துவம் ஆகிய பயிற்சி நிகழ்ச்சிகள் உள்ளடங்குகின்றன. 2013ஆம் ஆண்டினுள் உள்ளூர்ப் பயிற்சித் திட்டங்களுக்கென ரூபா 0.13 மில்லியன்களும் வெளிநாட்டுப் பயிற்சித் திட்டங்களுக்கென ரூபா 9.27 மில்லியன்களும் செலவிடப்பட்டன.

### 17. உள்ளகத் தகவல்கள் தொழில்நுட்பத் தொகுதியை மேம்படுத்துதல்

மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் போக்குவரத்துச் சேவைகளுக்குரிய தகவல்களைப் பொதுப் பயணிகளுக்குப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அனுமதிப்பத்திரதாரிகளை அறிவுறுத்தும் பொருட்டு உரிய பிரிவுகள், அலகுகள் மூலம் அனுப்பப்பட்ட தகவல்களை அரச நியமங்களுக்கு இணங்குமாறு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது. இதன் மூலம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வலைத்தளத்தில் காணப்படும் தகவல்களை இற்றைப்படுத்தல் மற்றும் புதிய தகவல்களைத் தேடுதலை எளிதாக்கும் விதத்தில் எளிய முறைமைகள் 2013ஆம் ஆண்டினுள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் கீழ் பேருந்துக் கட்டணம் குறித்து தரவுகளைத் தேபோஆ வலைத்தளத்தினூடாக பெற்றுக் கொள்ள முடிதல், மாகாணங்களுக்கு இடையிலான பேருந்து நேர அட்டவணைகளை வலைத்தளத்தினூடாக எளிதாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வலைத்தளத்தை மேலும் முன்னேற்றுதல் ஆகியவற்றிற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 18. தனியார் பேருந்துச் சேவைகளை மீளமைத்தல்

### தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் திருத்தங்கள்

1991இன் 37ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தில் அவசியமான திருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய துறைகளை இனங்கண்டு உரிய வரைவினைத் தயாரித்து திருத்தத்திற்கான உரிய மேற்படி நடவடிக்கைகளை எடுப்பதற்கு தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சபைக் கூட்டம்

வருடத்தினுள் நடாத்தப்பட்ட பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை 12 ஆகும்.

வருடத்தினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களின் எண்ணிக்கை 04 ஆகும்.

# வருடாந்தக் கணக்கு

| தேசிய போக்குவரத்து ஆணைக்குழு | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| **2013.12.31ஆந் திகதியில் நிதி நிலைமைக் கூற்று** | குறிப்பு | **2013** | **2012** |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி , உபகரணங்கள் | **4** | 505,315,317 | 455,190,797 |
| நூலகப் புத்தகங்கள் | | 762,126 | 702,479 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **506,077,443** | **455,893,275** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| கிடைக்க வேண்டிய வருமானம் | **5** | 3,960,160 | 3,917,222 |
| கிடைக்க வேண்டிய வருமானம் -ஊழியர் | **6** | 17,037,820 | 15,050,801 |
| முதலீடுகள்- நடைமுறை வைப்புக்கள் | **7** | 16,525,336 | 12,722,879 |
| முதலீடுகள் -திறைசேரி உண்டியல்கள் | **8** | 8,400,591 | 7,422,983 |
| கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் | | 10,004,698 | 22,860,147 |
| காசும் காசுக்கு சமமானவையும் | **9** | 171,056,940 | 315,217,619 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **226,985,545** | **377,191,652** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **733,062,988** | **833,084,927** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| அரசாங்க ஏற்பாடுகள் | **10** | 428,949,131 | 407,231,140 |
| உதவித்தொகை ஒதுக்குகள் | **11** | 23,625,293 | 21,852,808 |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | **452,574,423** | **429,083,949** |
| **நடைமுறை பொறுப்பக்கள்** | | | |
| செலுத்த வேண்டிய செலவினங்கள் | **12** | 92,899 | 2,744,433 |
| மீளச் செலுத்தவேண்டிய கேள்விப்பத்திர வைப்புக்கள் | | 29,611,054 | 25,603,554 |
| தவணைமுறைக் கடன் வழங்கல் திட்டம் | | 17,632,912 | 17,632,912 |
| ஒதுக்குகள் மற்றும் சேர் செலவு | **13** | 119,693,278 | 63,366,189 |

| | | |
|---|---|---|
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | **167,030,144** | **109,347,088** |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | **619,604,567** | **538,431,037** |
| **தேறிய சொத்துக்கள்** | **113,458,421** | **294,653,890** |
| **தேறிய பொறுப்புக்கள்/உடைமை உரிமை** | | |
| திரண்ட நிதியம் | **113,458,421** | **294,653,891** |
| **மொத்த தேறிய பொறுப்புக்கள்/உடைமை உரிமை** | **113,458,421** | **294,653,891** |

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்கள், இலங்கை அரசாங்கப் பிரிவின் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தாயரிக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

**…………………………………..**
**கணக்காளர்**

இந்நிதிக்கூற்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**………………………………….** **……………………………………..**
**தலைவர்**

**பணிப்பாளர் நாயகம் (பதில்)**

திகதி : ………………………..

கொழும்பு

(இலங்கை ரூபாவில்)

| 2013.12.31ஆந் திகதியில் முடிந்த ஆண்டிற்கான செயலாற்றுகை தொடர்பிலான கூற்று | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| **வருமானம் மற்றும் அரசாங்கத்திடமிருந்து பெற்ற ஏற்பாடு** | | | |
| கருத்திட்டங்களுக்கான அரச ஏற்பாடுகள் கிடைத்தல் | | 370,000,000 | 197,332,602 |
| வருமானம் | **14** | 272,728,147 | 269,594,764 |
| ஏனைய வருமானம் | **15** | 59,884,229 | 74,567,325 |
| **மொத்தம்** | | **702,612,376** | **541,494,691** |
| **செலவுகள்** | | | |
| விசேட கருத்திட்டச் செலவுகள் | **16** | **714,967,598** | **397,693,861** |
| **தொழிற்படு செலவுகள்** | **17** | | |
| ஊழியர் பணிக்கொடை | **17.1** | 81,723,089 | 78,396,842 |
| போக்குவரத்துச் செலவுகள் | **17.2** | 14,373,763 | 10,816,786 |
| பயணச் செலவுகள் மற்றும் பிழைப்பூதியக் கொடுப்பனவு | **17.3** | 3,650,195 | 4,600,066 |
| நிறுவனச் செலவுகள் | **17.4** | 27,114,262 | 19,144,489 |
| நிலையான சொத்துக்களின் புதுப்பித்தல்களும் பாரமரிப்பும் | **17.5** | 1,745,535 | 1,237,412 |
| ஊழியர் நலன்புரி | **17.6** | 7,328,758 | 7,363,184 |
| பதவியணியினர் அபிவிருத்தி | **17.7** | 163,316 | 831,705 |
| சட்ட மற்றும் பிற கட்டணங்கள் | **17.8** | 1,419,323 | 852,752 |
| தொடர்பாடல் செலவுகள் | **17.9** | 3,608,571 | 1,699,950 |
| தேய்மானம் | **17.10** | 24,859,175 | 15,249,449 |
| நிதிசார் கட்டணங்கள் | **17.11** | 47,998 | 54,593 |
| ஏனைய செலவுகள் | **17.12** | 2,806,263 | 872,922 |
| **மொத்த தொழிற்பாட்டுச் செலவினங்கள்** | | **168,840,247** | **141,120,149** |

| | | |
|---|---|---|
| **மொத்த செலவினங்கள்** | **883,807,846** | **538,814,009** |
| ஆண்டிற்கான மிகை/(குறைநிலை) | **(181,195,469)** | **2,680,681** |

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

*(இலங்கை ரூபாவில்)*

2013 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிந்த ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள்/
உடைமை உரிமை மாற்றங்கள் குறித்து கூற்று

| | | திரண்ட மிகை (குறைநிலை) | மொத்தம் |
|---|---|---|---|
| **2011 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி** | | **512,264,709** | **512,264,709** |
| அரசாங்க ஏற்பாட்டிற்கான சீராக்கல்கள் | **குறிப்பு - A** | (220,500,000) | (220,500,000) |
| கடந்த ஆண்டிற்கான சீராக்கல்கள் | **குறிப்பு - B** | 208,500 | 208,500 |
| ஆண்டிற்கான மிகை/குறைநிலை | | 2,680,681 | 2,680,681 |
| **2012 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி** | | **294,653,891** | **294,653,891** |
| ஆண்டிற்கான மிகை/குறைநிலை | | (181,195,469) | (181,195,469) |
| **2013 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி** | | **113,458,421** | **113,458,421** |

**குறிப்பு – A**

இல 241 பூங்கா வீதியில் நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள காணி இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற காணியாகக் கணக்கிடப்பட்டுள்ளமை கூட்டப்பட்ட மிகை/குறைநிலை மற்றும் காணியின் நியாயமான விலையின் படி சொத்தொன்றாக ஆகும். இலங்கை கணக்கீட்டு நியமங்கள் LKAS 20 மற்றும் அரசிடமிருந்து கிடைக்கப்பெறும் ஏற்பாடுகள், அரச உதவித்தொகைகளை வெளிக்கொணரும் கணக்கீட்டுக் கொள்கையின் படி இலங்கை அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்ற காணி அரசிடமிருந்து கிடைத்த ஏற்பாடாக இனங்கண்டுள்ளதுடன் 2010 மற்றும் 2011 காலப்பிரிவில் கட்டடத்தின் ஆயு காலத்தினுள் இலாபம் அல்லது நட்டம் மீதான இந்த ஏற்பாட்டு கடன்கரைப்பு செய்வதற்கு கூட்டப்பட்ட பெருமானத்தின் படி மிகை அல்லது தேய்மானத்தின் படி பொருத்தமான சீராக்கல்கள் செய்யப்படும்.

**குறிப்பு - B**

2011இல் முடிவடையும் நிதிக் கூற்று வருடத்திற்கான 208,500 ரூபா நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்காக தவறாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

*(இலங்கை ரூபாவில்)*

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று | 2013 | 2012 |
|---|---|---|
| **தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாக காசுப்பாய்ச்சல்** | | |
| ஆண்டிற்கான மிகை/குறைநிலை | (181,195,469) | 2,680,681 |
| **காசு இல்லா வேறுபாடுகள்** | | |
| தேய்மானம் | 24,859,175 | 15,249,449 |
| கடன் கரைப்பு | (26,782,010) | (67,672,872) |
| ஆண்டிற்கான பணிக்கொடை செலவுகள் | 3,566,085 | 4,525,580 |
| வட்டி வருமானம் | (33,102,220) | (31,394,454) |
| செயற்படு மிகை/குறைநிலை– மாற்றங்களுக்கு முன்னர் தொழிற்படு மூலதனம் | **(212,654,439)** | **(76,611,615)** |
| **தொழிற்படு மூலதனத்தின் மாற்றங்கள்** | | |
| கிடைக்கவேண்டிய வருமானங்கள் | (42,938) | (839,852) |
| கிடைக்கவேண்டிய வருமானங்கள் -ஊழியர் | (1,987,019) | (97,548) |
| கிடைக்கவேண்டிய வட்டி வருமானம் | 12,855,449 | (11,188,783) |
| செலுத்தவேண்டிய செலவினங்கள் | (2,651,534) | 1,566,378 |
| மீளச் செலுத்தவேண்டிய கேள்வி வைப்புக்கள் | 4,007,500 | 1,569,500 |
| ஒதுக்குகள் மற்றும் சேர் செலவு | 56,327,090 | (7,054,621) |
| **தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாகப் பணம்** | **(144,145,891)** | **(92,656,541)** |
| பணிக்கொடை நிதியக் கொடுப்பனவுகள் | (1,793,600) | (953,816) |
| **தொழிற்படு நடவடிக்கைகள் மூலமாகப் தேறிய பணம்** | **(145,939,491)** | **(93,610,357)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலமாகக் காசுப் பாய்ச்சல்** | | |
| காணி, பொறிதொகுதி மற்றும் கருவிகள் சுவீகரிப்பு | (74,983,695) | (33,014,532) |

| | | |
|---|---|---|
| நூலகப் புத்தகங்கள் சுவீகரிப்பு | (59,648) | (49,934) |
| நடைமுறை வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களுக்கான தேறிய முதலீடு | (4,780,065) | (1,318,875) |
| வட்டி கிடைப்பனவுகள் | 33,102,220 | 31,394,454 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல் (திறைசேரி)** | **(46,721,188)** | **(2,988,887)** |
| **நிதிசார் நடவடிக்கைகள் மூலம் காசுப் பாய்ச்சல்** | | |
| ஏற்பாடு கிடைப்பனவுகள் | 48,500,000 | 49,430,759 |
| **நிதிசார் நடவடிக்கைகள் மூலம் தேறிய காசுப் பாய்ச்சல்** | **48,500,000** | **49,430,759** |
| **ஆண்டு முதலில் காசும் காசுக்கு சமமானவையும்** | **(144,160,679)** | **(47,168,485)** |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | 315,217,619 | 362,386,104 |
| **ஆண்டினிறுதியில் காசும் காசுக்கு சமமானவையும்** | **171,056,940** | **315,217,619** |

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழு**

**2013 திசெம்பர் 31 இல் முடிந்த ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**1. தாபனத் தகவல்கள்**

**1.1 அறிக்கையிடும் நிறுவனம்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 1991 இல 37 ஐக் கொண்ட தேபோஆ சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அலுவலகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறும் மத்திய நிலையம் இல 241, பூங்கா வீதி, கொழும்பு 05இல் அமைந்துள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2013ஆம் ஆண்டு திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிசார் தரவுகள் உள்ளடங்குகின்றன.

**1.2 பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை**

பயணிகள் பேருந்துகள் மூலம் பயணிக்கும் மக்களுக்கு போக்குவரத்துச் சேவையினை வழங்குதல் குறித்து இலங்கை அரசிற்கு ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் பயணிகள் பேருந்துகளுக்கான நிச்சயிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு பயணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல் என்பனவே ஆணைக்குழுவின் பணியாகும்.

**1.3** 2013ஆம் ஆண்டு இறுதியாகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிரந்தரமான ஊழியர்கள் 137 ஆகும். அத்துடன் ஒப்பந்த அடிப்படையில் 35 ஊழியர்கள் பணி புரிந்துள்ளனர்.

**1.4 அறிக்கையிடும் திகதி**

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடும் திகதி திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவுறும்.

**1.5 வெளியிடுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட திகதி**

ஆணைக்குழுவின் பணிப்பாளர் சபை/ அங்கத்தவர்களால் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு 2014 ஜூலை 30ஆந் திகதி அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

**2. முக்கிய கணக்கீட்டு நடைமுறைகளின் சுருக்கம்**

**2.1 தயாரித்தலின் அடிப்படை**

LKAS 20 கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அரச ஏற்பாடுகளுக்கு கணக்கீடு செய்தல் மற்றும் அரசாங்கத்தினால் கிடைக்கும் நிதிய உதவி வெளிப்படுத்தலுக்கான நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான உடன்பாட்டினை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை தனியார் துறையின் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சில கணக்கீட்டு மதிப்பீடுகள் தேவையாகும்.

### 2.2 கணக்கீட்டு நடைமுறைகளில் மாற்றங்கள்

கீழ் குறிப்பிட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் மாற்றங்கள் நிதிக் கூற்றுக்கள் முன்வைக்கப்படும் காலப்பிரிவின் ஒழுங்குமுறையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.3 வெளிநாட்டு நாணய மாற்றம்

#### 2.3.1 தொழிற்படு மற்றும் முன்வைத்தல் நாணய அலகு

நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவை நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் ஆரம்பப் பொருளாதார சூழலின் படியே அளவிடப்படும். நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

#### 2.3.2 கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிலுவை

வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள் தொழிற்படு நாணய கொடுக்கல்வாங்கலாக மாற்றப்படுவது கொடுக்கல்வாங்கல் நடைபெற்ற தினத்தில் காணப்பட்ட செலாவணி வீதத்தின் அடிப்படையிலாகும்.

### 2.4 சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள்

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகள் என்பது கொள்வனவுச் செலவு அல்லது கட்டுமானப் பணிச் செலவு மற்றும் சொத்துக்களை தொழிற்படு நிலைமைக்கு கொண்டு வருவதற்கான செலவு என்பவற்றைக் குறிக்கும்.

நிலையான தன்மையைக் கொண்ட சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கும் அல்லது உழைக்கும் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கென செலவிட்ட தொகை மூலதனச் செலவினம் எனக் கருதப்படுகின்றது.

| **சொத்துக்கள் வகை** | **வருடம்** |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 5 ஆண்டுகளிற்குள் |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 10 ஆண்டுகளிற்குள் |
| அலுவலக உபகரணங்கள் | 5 ஆண்டுகளிற்குள் |
| பல்வேறு உபகரணங்கள் | 4 ஆண்டுகளிற்குள் |
| கணினிகளும் அச்சிடும் இயந்திரங்களும் | 5 ஆண்டுகளிற்குள் |
| இயந்திரங்கள் | 5 ஆண்டுகளிற்குள் |
| கட்டடங்கள் | 20 ஆண்டுகளிற்குள் |
| இலத்திரனியல் உபகரணங்கள் | 20 ஆண்டுகளிற்குள் |

### 2.5 திறைசேரி உண்டியல்கள் மற்றும் உண்டியல்கள் மீதான முதலீடுகள்

திறைசேரி உண்டியல்கள் மற்றும் உண்டியல்கள் நடைமுறை செலவினங்களின் படி குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.6 கிடைப்பனவுகள்

கிடைப்பனவுகள் என்பது பெற்றுக்கொள்ளப்படும் சேவைகளுக்காக செலுத்த வேண்டியுள்ள பணமாகும். கூட்டுத்தொகை தொழிற்படு சுழற்சியில் எதிர்பார்க்கப்படுவதுடன், கிடைப்பனவுகள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்படும். கிடைப்பனவுகளை இனங்காணல் மற்றும் கணிப்பிடல் கொடுக்கல்வாங்கல் செய்யும் பெறுமதியின்/பெருமானத்தின் படி மேற்கொள்ளப்படும்.

### 2.7 காசும் காசுக்கு சமமானவையும்

காசுப் பாய்ச்சல் கூற்றில் கையிலுள்ள பணம், வங்கியிலுள்ள கோரிக்கை வைப்புக்கள், வங்கியிலுள்ள உடனடி/நிலையான வைப்புக்கள், பணிக்கொடை நிதியங்கள் என்பன காசும் காசுக்கு சமமானவை என இனங்காணப்படுகின்றன.

### 2.8 கொடுப்பனவுகள்

கொடுப்பனவுகள் என்பது பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குனர்கள் பெற்றுக்கொள்ளும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு கட்டாயமாகச் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளாகும். கொடுப்பனவு வர்த்தகத்தில் சாதாரண தொழிற்படு வர்த்தக வட்டத்தில் மேற்கொள்ளவேண்டிய கொடுப்பனவு எனின், அது நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தப்படும். (1 வருடம் அல்லது அதற்குக் குறைவாக) அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்களில் அவை நடைமுறையற்ற சொத்துக்களாக இனங்காணப்படும்.

கொடுப்பனவுகள் பிரதானமாக இனங்காணப்படுவது கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் விலையின் படி என்பதுடன், வர்த்தகத்தில் சாதாரண தொழிற்படு வட்டத்தில் அவ்விலையில் கணிக்கப்படும்.

### 2.9 அரச ஏற்பாடுகள்

நிதிசாரா ஏற்பாடுகள் உட்பட அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் ஏற்பாடுகள் அவற்றின் நியாயமான பெறுமதியின் படி இனங்காணப்படும்.

சொத்துக்கள், பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் படி அரச ஏற்பாடுகள் நடைமுறையற்ற சொத்துக்களில் அரசாங்கத்தின் பிற்போடப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், நிதிசார் செயலாற்றுகைக் கூற்றில் இது இனங்காணப்பட்டிருப்பது உரிய சொத்துக்களில் எதிர்பார்க்கப்பட்டட ஆயுகாலத்தில் எளிய நேர்கோட்டு அடிப்படையிலாகும்.

நிதிசாரா ஏற்பாடுகள் நிதிசாரா சொத்துக்களில் காவுகைப் பெறுமதியின் படி ஏற்படுகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சொத்துக்கள் கணக்கிடப்படும்.

**2.10 கொள்வனவு ஆகுசெலவு**

நிதிசார் பெறுபேறுகள் தொடர்பான கூற்றில் கொள்வனவு ஆகுசெலவு இனங்காணப்படுவது கொள்வனவு செய்யப்படும் காலத்திற்குள் ஆகும்.

**2.11 ஊழியர் நலன்கள்**

ஆணைக்குழு நிலையான நன்மைகள் மற்றும் நிலையான பங்களிப்பு குறித்து திட்டங்களைக் கொண்டுள்ளது.

**(அ) நிலையான பங்களிப்புத் திட்டம்**

நிலையான பங்களிப்புத் திட்டமானது ஆணைக்குழுவினால் நிலையான பங்களிப்புத் தொகையொன்று பிரத்தியோகமாக தனிப்பட்ட நிறுவனமொன்றிற்கு தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டமாகும். இது தொழிலுக்குப் பின்னரான நன்மை திட்டம் என்பதால் மேலும் அதற்காகப் பங்களிப்புத் தொகையொன்றைச் செலுத்தவதற்கு ஆணைக்குழுவிற்கு பௌதிக மற்றும் ஆன்மிக ரீதியான பிணைப்பு இல்லை. முதிர்ச்சியடைந்ததன் பின்னர் இப்பங்களிப்புத் தொகை ஊழியர் நன்மை செலவாக இனங்காணப்படும்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக ஊழியர் ஒருவரின் மொத்த ஊதியத்திலிருந்து 12% பங்களிக்கப்படுவதுடன், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு மொத்த ஊதியத்திலிருந்து 3% பங்களிக்கப்படும்.

**(ஆ) நிலையான நலன்கள் திட்டம்**

ஊழியரின் முதல் வருடம் முதல் பணி புரியும் ஒவ்வொரு வருடத்திற்கும் ½ மாதச் சம்பளத்தினை ஊழியர் பணிக்கொடை நிதியத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் 1983 பணிக்கொடை நிதியக் கொடுப்பனவுகள் சட்டத்தின் இல 12இன் பிரகாரம் ஊழியர் ஒருவர் பணிக்கொடை நிதியத்தில் உரிமைப் பெறலாம்.

**(இ) குறுங்கால ஊழியர் நன்மைகள்**

குறுங்கால ஊழியர் நன்மைகள் தொடர்பில் பொறுப்புக்கள் கணக்கிடப்படுவது ஊழியர்களினால் நிறைவேற்றப்படும் சேவைகளுக்காக செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தள்ளுபடிகள் அல்லது பணஞ்சார் பெறுமதி மீதாகும்.

**2.12 ஏற்பாடுகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்**

கடந்த காலத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பெறுபேறாக ஆணைக்குழுவிற்கு தற்போதுள்ள சட்டரீதியான கடப்பாடுகள் அல்லது ஆணைக்குழுவிற்குத் தேவையான பொருளாதார வளங்களின் வெளிப்பாய்வு நடைபெறக்கூடும் என்பதுடன் நம்பகமான முறையில் இப்பெருமானத்தினை மதிப்பீடு செய்யமுடியும் என சாத்தியமாகும் போதே தொழிற்படு செலவினங்களுக்கான ஏற்பாடுகள் இனங்காணப்படும்.

நடப்புக் கடப்பாடு அல்லது பொறுப்புக்கள் தொடர்புபட்ட இடர்கள் மற்றும் ஐயப்பாடுகள் அறிக்கையிடும் நாளில் காணப்படும் மிகவும் நம்பகமான ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்டு நடப்புக் கடப்பாடுகளும் பொறுப்புக்களைத் தீர்த்தல்/ பூர்த்திசெய்தலிற்கு தேவையான மதிப்பீடு செய்யப்பட்ட செலவின் படி ஏற்பாடுகள் கணிக்கப்படும்.

எல்லா எதிர்பாரா பொறுப்புக்களும் நிதிக் கூற்றுக்களில் குறிப்பொன்றாக தெரிவிக்கப்படாவிடின் வளங்களின் வெளிப்பாய்வின் சாத்தியப்பாடு இல்லாது போகும்.

**2.13 வருவாயை இனங்காணல்**

பொருளாதார நன்மைகள் உண்மையிலேயே நிறுவனத்தினுள் உட்பாயும் சந்தர்ப்பத்தில் வருவாயாக இனங்காணல்.

தேசிய ஆணைக்குழு வருவாயை இனங்காண்பது வருவாயின் அளவை உண்மையிலேயே கணிப்பிடக்கூடிய சந்தர்ப்பத்தில் மற்றும் எதிர்காலத்தில் ஆணைக்குழுவிடம் பொருளாதார நன்மைகள் உட்பாயக்கூடிய நிகழ்தகவின் படியாகும்.

ஆணைக்குழுவினால் வருவாயை இனங்காண்பதற்காக கீழ் குறிப்பிட்டுள்ள பிரமாணங்களைக் கவனத்திற் கொள்ளலாம். அவ்வப் பிரதான பாதைகளில் வருவாயினை மதிப்பீடு செய்வதற்குப் பிரயோகிக்கப்பட்டுள்ளது.

**(அ) அனுமதிப்பத்திர வருவாய்**

ஆணைக்குழுவிடம் எதிர்காலத்தில் பொருளாதார நன்மைகள் திட்டத்திற்குள்ள இயலுமை மீதே வீதி அனுமதிப் பத்திரங்களினால் கிடைக்கும் வருவாய் இனங்காணப்படுகின்றது.

**(ஆ) சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் கருவிகள் என்பவற்றை அகற்றுவதால் ஏற்படும் இலாபம் மற்றும் நட்டம்**

அகற்றுகைகளால் ஏற்படும் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் என்பன தீர்மானிக்கப்படுவது கிடைத்த/ உருவாக்கப்பட்ட பணத்தினை காவுகை ஆகுசெலவுடன் ஒப்பிடுவதன் மூலமாகும். இது நிதிப் பெறுபெற்றுக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது.

**2.14 செலவினங்கள்**

தொழிற்படும் காலத்தினுள் மேற்கொள்ளப்பட்ட செலவு என்பது அறிக்கையிடும் காலப்பகுதியில் இலாபமாகக் கிடைக்கும் வருமானமாகும்.

**2.15 ஐந்தொகை நாளின் பின்னர் ஏற்படும் நிகழ்வுகள்**

ஐந்தொகை நாளின் பின்னர் ஏற்படும் திரவ நிகழ்வுகளைக் கருத்திற் கொள்வதுடன், நிதிக் கூற்றுக்களில் தேவையான இடங்களில் பொருந்தும் வண்ணம் சீராக்கல்கள் மற்றும் வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 2.16 பொறுப்புக்கள்

ஐந்தொகை நாளின் பின்னர் ஏற்படும் எல்லா திரவப் பொறுப்புக்களையும் இனங்கண்டு அது குறித்து நிதிக் கூற்றுக்களில் குறிப்பதன் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 2.17 முக்கியமான கணக்கீட்டு நடைமுறைகளும் (மதிப்பீடுகள்) தீர்வுகளும்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது முகாமையினால் பல தீர்வுகள் பிரயோகிக்கப்படுவதுடன், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றை இனங்காணல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் பல பிரயோகிக்கப்படுகின்றன.

அளவிடுதல் என்ற இனங்காணல் குறித்து குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை ஏற்படுத்தும் மதப்பீடுகள் மற்றும் ஊகங்கள் தொடர்பிலான தகவல்கள் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) தேய்வடைந்து செல்லும் சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலம்

சொத்துக்களின் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார பயன்பாடு மீதான ஐந்தொகை தினத்தில் தேய்வடைந்து செல்லும் சொத்துக்களின் பயன்மிகு ஆயுட் காலம் மதிப்பீடு செய்யப்படுவதாக முகாமை மீளாய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளில் உள்ள நிச்சயமற்றதன்மைக்கு காரணம் சில மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதிரிப்பாகங்களின் பயன்பாட்டினை மாற்றுவதற்கு ஏதுவாகும் வழக்கற்று போன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதாகும்.

# கணக்காய்வளர் தலைமை அதிபதியின் அறிக்கை

මගේ අංකය
எனது இல
My No. ஆர்ரீ/பீ/என்ரீசீ/எப்ஏ/2012

ඔබේ අංකය
உமது இல
Your No.

දිනය
திகதி
Date 2014 ஏப்ரல் 30

தலைவர்,
தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

**தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசோட்டக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1991 இன் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதிகாரச்சட்டத்தின் 37 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை 2013 யூலை 31 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 உயர் கணக்கீட்டு நடைமுறைகள்

உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றொன்று நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டில் தேசத்திற்கு மகுடம் கண்காட்சிக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 6,163,680 தொகை கணக்குகளில் புறம்பாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், செயற்திட்டச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் வெளிப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 333,452,811 தொகைக்காக நிதி அமைச்சரின் ஒத்திசைவும் குறித்த அமைச்சரின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவையின் 371(2)(அ) | மட்டக்களப்பு மற்றும் மஹஓய இல் இடம்பெற்ற சைக்கிள் வண்டிகளை பகிர்ந்தளிக்கும் வைபவத்திற்காக ஒரு சந்தர்ப்பத்தில் வழங்க |

முடியுமான உச்ச தொகை ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 900,000 குறித்த நோக்க உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| (இ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2(ஆ) ஆம் பந்தி | தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்குரிய அங்கீகரித்த பதவியணியினை அடிப்படையாகக் கொண்டு பதவிகள் மற்றும் தரங்களை உள்ளடக்கியதாக அமைப்பு வரைபடமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2010 திசெம்பர் 31 ஆந் திகதிய 26/2010 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | மீளாய்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் 29 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் இவ்வுத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கப்பட முன்னர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. போதியளவு பதவியணி இன்மையால் சேவைத் தேவை நிமித்தம் இவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்டதாக தலைவரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முன்னைய ஆண்டுச் சீராக்கங்களை மேற்கொண்டதன் பின்னர் ரூபா 8,189,317 பற்றாக்குறையினைக் காண்பித்ததுடன் அதனையொத்த முன்னைய ஆண்டிற்காக ரூபா 192,801,311 மிகையைக் காண்பித்திருந்தது. அதன்படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 200,990,628 பின்னடைவைக் காட்டுகின்றது. மீண்டெழும் செலவினத்திற்காக அரசாங்க மானியம் கிடைக்கப்பெறாமை மற்றும் செயற்திட்டத்திற்காக திறைசேரியிடமிருந்து கிடைத்திருந்த நிதியின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 36 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை இதற்குப் பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சமூக ரீதியில் அத்தியாவசிய பேரூந்துச் சேவைகளை பேணிச் செல்வதற்காக மீளாய்வாண்டில் 82 கமிசெரிய சேவைகளை ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 21 சேவைகள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அது இலக்கிடப்பட்ட சேவைகளின் அளவில் 24 சதவீதமாகும்.

(ஆ) பேரூந்துக் கம்பனிகளை தாபித்தல் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டில் 05 பேரூந்துக் கம்பனிகளை தாபிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 02 பேரூந்துக் கம்பனிகளை மாத்திரமே ஆரம்பிக்க முடிந்திருந்ததுடன் இச் செயற்பாட்டிற்காக ரூபா 1,705,433 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொட்டாவை முதல் காலி வரையான அதிவேகப் பாதையில் பேரூந்துச் சேவைக்காக 2011 ஆம் ஆண்டில் கேள்வி கோரப்படுவதன் மூலம் 05 பயணிகள் போக்குவரத்துச் சேவை உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் 13 பேரூந்துகளாக அதிகரிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த 08 உத்திரவுப் பத்திரங்கள் கேள்வி கோரப்படாது வேறு பாதைகளிற்காக ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த பயணிகள் சேவை உத்தரவுப் பத்திரத்தின் உரிமைத்துவம், பாதை மற்றும் சேவை போன்றவற்றை திருத்தியமைத்து வழங்கப்பட்டிருந்தன. இப் பாதை உத்தரவுப் பத்திரத்திற்காக முன்னைய கேள்வி கோரலில் தீர்மானிக்கப்பட்டிருந்த குறைந்த வருடாந்த விலைமனுவான ரூபா 740,000 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) போக்குவரத்து ஆணைக்குழுவினால் 2010 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் - கொழும்பு வீதியில் உத்தரவுப் பத்திரமின்றி ஓட்டத்தில் விடப்பட்டுள்ள பேரூந்துகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் வெளிப்பட்டிருந்த அனுமதியற்ற பேரூந்து உரிமையாளர்களிற்காக 155 உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு 10/2374/445/007 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதில் 130 உத்தரவுப்

பத்திரங்கள் 2011 ஆம் ஆண்டில் விநியோகப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அவ் ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்காத 20 பேரூந்து உரிமையாளர்களிற்கும் அந்த அங்கீகாரத்தின் கீழே உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், 2012 மே 31 ஆந் திகதிக்குப் பின்னர் மேற்படி அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல் இடைநிறுத்தப்பட்டு கேள்வி கோரப்படுதலின் மூலம் மாத்திரம் உத்தரவுப் பத்திரங்களை வழங்குவதற்கு 2012 மார்ச் 22 ஆந் திகதிய 49/2012 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அதனைக் கருத்திற்கொள்ளாது மேற்படி அமைச்சரவை தீர்மானத்தின் கீழே மேலும் இரண்டு நபர்களிற்கு வீதி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்விரண்டு நபர்களும் கூட ஆய்வின் ஊடாக இனங்காணப்பட்டிருந்த அனுமதியின்றிய பேரூந்து உரிமையாளர்களாக இல்லாதிருந்தமை வெளிப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் யாழ்ப்பாணம் - கொழும்பு வீதிக்காக விநியோகிக்கப்பட்டிருந்த 4 பயணிகள் சேவை உத்தரவுப் பத்திரங்களிற்குரிய ஆரம்ப விண்ணப்பதாரிகளால் உத்தரவுப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வேறு நபர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் ஆணைக்குழுவினால் கையளிக்கப்பட்டிருந்தோரின் பெயரில் குறித்த பயணிகள் சேவை உத்தரவுப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக உரித்தினை முறைமையாக்குதலின் கீழ் ஆணைக்குழுவிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த ரூபா 400,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2012 சனவரி 09 ஆந் திகதிய தே.போ.ஆணை./ஓ/கே 2011 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் கொழும்பு முதல் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய நகரங்களிலிருந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்காக வெற்றிடமாகக் காணப்பட்ட வீதிகளிற்குப் புறம்பாக 04 பயணிகள் சேவை உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க முயற்சிகளிற்குச் சொந்தமான வளங்கள் எக்காரணம் கொண்டும் வரிசை அமைச்சின் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடாத போதிலும் ஆணைக்குழுவின் நுவரெலியா மாவட்ட அலுவலகத்தைத் தாபிப்பதற்காகவும் விடுமுறை சுற்றுலா விடுதியினை நடாத்திச் செல்வதற்காகவும் ரூபா 2,977,179 தொகை ஆணைக்குழுவால் செலவிடப்பட்டிருந்த போதிலும், வரிசை அமைச்சினால் அமைச்சரின்

நுவரெலியா அலுவலகம் மற்றும் சுற்றுலா இல்லத்திற்காக எனக் குறிப்பிட்டு இக்கட்டிடத்தின் திருத்த வேலைகள், நீர் மற்றும் மின்சாரச் சிட்டைகள் செலுத்தப்பட்டிருந்தன.

**4.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

போக்குவரத்து ஆணைக்குழுவினால் பேரூந்துப் பயணிகளிற்காக பயணிகள் ஓய்விடத்தினை நிர்மாணிப்பதற்கென ரூபா 307,759 தெகையினை செலவிட்டு 2012 மார்ச் 27 ஆந் திகதி செய்திப்பத்திரிகைகளில் கொள்வனவு அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை பயணிகள் ஓய்விடத்தை நிர்மாணிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 ஒப்பந்தவேலை நிர்வாகக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெஸ்தியன் மாவத்தையின் பேரூந்து தரிப்பிடத்திலுள்ள 2 கழிவறை முறைமைகளின் புதுப்பித்தல் ஒப்பந்த வேலை தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்த ஒப்பந்த வேலைகளிற்காக இரண்டு சந்தர்ப்பங்களில் கேள்விமனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் முன்னைய கேள்வி கோரலின் போது குறைந்த விலை மனுவை சமர்ப்பித்திருந்த போதிலும் அந்த ஒப்பந்த வேலைகளை வெற்றிகரமாக பூரணப்படுத்துவதற்கு முடியாது போனதாக குறிப்பிட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையால் நிராகரிக்கப்பட்டிருந்த ஒப்பந்தகாரரே இரண்டாவது தடவையும் குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்திருந்ததுடன் முந்திய நிலையினைக் கருத்திற்கொள்ளாது அந்த ஒப்பந்தக் காரருக்கே குறித்த ஒப்பந்த வேலைகள் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2011 யூலை 07 ஆந் திகதிய வேலை ஒப்படைத்தல் கடிதத்தின் படி, உடனடியாக புதுப்பித்தல் வேலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2011 ஆகஸ்ட் 04 ஆந் திகதியன்றே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஒப்பந்தம் ஆரம்பிக்கப்பட்டு 03 மாதத்தினுள் வேலைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அக்காலப்பகுதி முடிவடைகையில் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்காமையால் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் மீது மேலும் 06 மாதங்கள் அதாவது 2012 மே 04 ஆந் திகதி வரை காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 2 ஆம்

இலக்க கழிவறை முறைமையின் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 01 ஆம் இலக்க கழிவறையின் பௌதீக செயன்முன்னேற்றம் ஏறத்தாழ 50 சதவீதமாக இருந்தது.

(இ) ஆணைக்குவிற்குச் சொந்தமான பெஸ்தியன் மாவத்தை பேரூந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள 2 கழிவறை முறைமைகளின் வசதிகளை பூரணப்படுத்தி கட்டணத்தை அறவிட்டு பேணிச்செல்வதற்காக மாதாந்தம் ரூபா 525,000 வாடகைக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் வெளித்தரப்பினருக்கு 06 ஆண்டுகளிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் 03 ஆவது நிபந்தனையின் படி மாதாந்த வாடகை தொடர்ந்துவரும் மாதத்தின் 5 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டுமெனவும் 03 மாதங்களிற்கு மேல் காலதாமதம் செய்யப்படின் உடன்படிக்கை இரத்தாகும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், மீளாய்வாண்டின் இறுதியளவில் தொடர்ச்சியாக 03 மாதங்கள் பணம் முறைப்படி செலுத்தப்படாத போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உடன்படிக்கையின் 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளின் படி கழிவறையினைப் பயன்படுத்துவதற்காக ஒரு பயணியிடமிருந்து ஒரு தடவைக்கு ரூபா 6 தொகையினை அறவிட்டு பற்றுச்சீட்டொன்றும் வழங்கப்பட வேண்டியதுடன் கழிவறையின் நுழைவாயிலில் அக்கட்டணத்தைக் காட்சிப்படுத்த வேண்டிய போதிலும், முறையான அங்கீகாரமின்றி ஒரு பயணியிடமிருந்து ரூபா 10 தொகை அறவிடப்படுவதுடன் அவ்வாறு அறவிடப்படுகின்ற தொகைக்காக பற்றுச்சீட்டொன்று வழங்கப்படுவதுமில்லை.

## 4.5 தாமதிக்கப்பட்ட செயற்திட்டங்கள்

சிசு செரிய செயற்திட்டத்தின் கீழ் 05 பேரூந்துகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டிருந்த பரீட்சார்த்த செயற்திட்டத்தின் பெபேறுகளின் படி மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகளிற்காக முற்செலுத்திய அட்டைகளை அறிமுகப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் கொள்வனவு அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரைக்கும் இச்செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.6 ஏனைய அரசாங்க நிறுவனங்களிற்கு வழங்கப்பட்டிருந்த ஆணைக்குழுவின் வளங்கள்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பந்திக்கு முரணாக ஆணைக்குழுவின் இரண்டு சாரதிகள் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் அவர்களுடைய சம்பளங்களும் படிகளும் ஆணைக்குழுவால் மீளளிக்கப்பட்டிருந்தது.

## 4.7 பதவியணி நிர்வாகம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் கீழுள்ளவாறாகும்.

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | (வெற்றிடங்கள்)/ மிகை |
|---|---|---|---|
| நிறைவேற்றுத் தரத்தினர் | 97 | 70 | (27) |
| நிறைவேற்றுத் தரமற்ற | 66 | 52 | (14) |
| ஏனையோர் | 27 | 22 | (5) |
| | 190 | 144 | (46) |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியுடன் உள்ளபடியான பதவியணியை ஒப்பிடுகையில் 46 பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுவதுடன் அதில் 27 பதவிகள் நிறைவேற்றுத் தரத்திலுள்ள பதவிகளாகும்.

(ஆ) 2012 மார்ச் 01 ஆந் திகதி முதல் 06 மாத காலத்திற்காக பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி ஊடக ஒருங்கிணைப்பாளராக நபரொருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவருக்கு மாதாந்தம் ரூபா 15,000 வீதம் 06 மாதங்களிற்காக ரூபா 90,000 படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. உத்தியோகத்தரின் வருகை, வெளியேற்றம் மற்றும் கடமைகள் தொடர்பில் பதிவேடொன்று பேணிவரப்பட வேண்டுமென்றும் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு முன்னர் அவரினால் ஆற்றப்பட்ட வேலைகள் மற்றும் வருகைகளும் வெளியேற்றங்களும் பரீட்சிக்கப்பட வேண்டுமென்றும் பணிப்பாளர் சபையால் அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான பதிவேடொன்று பேணிவரப்பட்டிருக்காமையால் வருகை, வெளியேற்றம் மற்றும் கடமைகள்

தொடர்பில் வருகை, வெளியேற்றம் மற்றும் கடமைகள் தொடர்பில் பரீட்சிக்கப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(இ) வேலை ஒப்படைத்தலின் பேரில் பெஸ்தியன் மாவத்தையிலுள்ள பேரூந்து தரிப்பிடத்தில் பேரூந்து பயணித்தல் நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பாளராக செயற்படுவதற்காக ஐந்து உத்தியோகத்தர்கள் 2012 செப்தெம்பர் 17 ஆந் திகதி முதல் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு நாளொன்றிற்கு ரூபா 750 வீதம் படியொன்றை செலுத்துவதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. முன்னைய சந்தர்ப்பத்திலும் இந்நடவடிக்கைக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் மீது மூன்று நபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு நாளொன்றிற்கு ரூபா 1,250 வீதம் படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. அவர்களது பதவி ஆலோசகர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களாக இருந்ததுடன் 2012 ஏப்ரல் 05 ஆந் திகதி முதல் முகாமைத்துவ உதவியாளர்களாக மாற்றப்பட்டிருந்ததுடன் 2012 செப்தம்பர் 17 ஆந் திகதி சேர்த்துக்கொள்ளப்பட்ட அந்த ஐந்து உத்தியோகத்தர்களிற்கும் பணிப்பொறுப்பு ஒப்படைத்தல்கள் பணிப்பாளரால் (பணங்கள் மற்றும் சேவை மேற்பார்வை) மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒப்பந்த அடிப்படையில் பெஸ்தியன் மாவத்தையின் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பாளராக 2012 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் 06 மாத காலத்திற்காக நாளாந்தம் ரூபா 1,500 வீதமும் மாதத்திற்கு ரூபா 18,000 எரிபொருள் படியொன்றையும் செலுத்துவதற்கு உட்பட்டு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் எரிபொருள் படிக்கு உரித்தற்றவர்களாக காணப்பட்ட போதிலும், அவ்வாறு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், பெஸ்தியன் மாவத்தையிலுள்ள பேரூந்து தரிப்பிடத்தில் பேரூந்து பயணித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக 9 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த ஆட்சேர்ப்புகளிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

(அ) மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தாயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் குறிப்பிடப்பட்டிருந்த காலப்பகுதியினுள் அடைவதற்கு எதிர்பார்த்த நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தெளிவாக இனங்காணப்பட்டு தயாரிக்கப்பட்ட திட்டமொன்றாக இருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட புதிய பயணிகள் சேவை உத்தரவுப் பத்திரங்களின் எண்ணிக்கை எந்தளவு என்பதும் புதிய பாதைகள் எவை என்பதும் திட்டமிடப்பட்டோ அல்லது மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டோ இருக்கவில்லை.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று செயற்பட்டிருந்த போதிலும், அதற்குத் தேவையான பதவியணியினரை அங்கீகரித்துக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் 133(1) மற்றும் (2) ஆம் இலக்க நிதிப்பிரமாணத்தின் படி ஆணைக்குழுவின் உள்ளகக் கணக்காய்வின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் செயற்பாடுகளை உரிய முறையில் பேணிச்செல்ல முடியாதிருந்தது.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அப் பாதீடு நிதியாண்டின் முடிவில் மீளத் திருத்தப்பட்டு பாதீட்டு முரண்களைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் 09 செலவினத் தலைப்புகளிற்குரிய பாதிடப்பட்ட தொகை ரூபா 4,452,359 இனால் விஞ்சப்பட்டு அத்தொகை செயற்திட்டச் செலவினத்தினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) வீதி உத்தரவுப் பத்திரங்களை வழங்குதல்

(ஆ) கணக்கீடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) ஒப்பந்த நிர்வாகம்

(உ) முற்பணங்களைச் செலுத்துதலும் தீர்த்தலும்

(ஊ) படிகளைச் செலுத்துதல்

எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**<u>தேசிய போக்குவரத்து ஆணைக்குழு</u>**

**<u>2013 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் மற்றும் தற்போதைய நிலைமை</u>**

**2.2.1 இலங்கை அரசாங்கப் பிரிவின் கணக்கீட்டு நியமங்கள்**

(அ) 2014ஆம் வருடத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ) விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு போக்குவரத்து நிறுவனங்களுக்காக கொள்வனவு செய்யப்படும் தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் என்பன நிலையான சொத்துக்கள் என சரியாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் இல: ஆர்ரீ/பீ/என்ரீசீ/2013/ஏகிவு- 17/12 கொண்ட கணக்காய்வு விசாரணை (2014 ஒக்டோபர் 24ஆந் திகதி கொண்ட) மற்றும் 2013 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான பதில்களை அளிக்கும் போது கணக்குக் குறிப்புக்களின் விபரத்துடன் இவ்விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**2.2.2 கணககீட்டுக் குறைப்பாடுகள்**

(அ) விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவு விசேட செயற்றிட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ஆகும். இவ்விசேட செயற்றிட்டச் செலவுகள் திறைசேரி ஏற்பாடுகளினால் அல்லது தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்படு நடவடிக்கைகளினால் ஈட்டப்பட்ட மிகையினைப் பயன்படுத்துவதனால் மேற்கொள்ளப்படுகின்றன. அதன் படி இச்செலவு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வருமானத்தை ஈட்டுவதற்குரிய செலவொன்றாக இன்மையால், அது விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு நிறுவனத்தின் செயற்படு பற்றாக்குறையில் தாக்கஞ் செலுத்தவில்லை.

(ஆ) எதிர்காலத்தில் முற்பணக் கொடுப்பனவுகளைக் கணக்கு வைக்கும் போது விசாரணையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் குறித்து கவனஞ் செலுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(இ) 2014ஆம் ஆண்டில் சேர் செலவினைக் கணக்கு வைக்கும் போது விசாரணையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் குறித்து கவனஞ் செலுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

**2.2.3 தெளிவுபடுத்தப்படாத வேறுபாடுகள்**

ஆணைக்குழுவின் கொள்கையானது வைப்பு மீதியினைப் பெயரளவுப் பெறுமதியில் பேணிக்கொள்வதாகும். இக்கொள்கை கடந்த பல வருடங்களாகப் பின்பற்றப்பட்டதுடன், இக்கணக்கு வருடத்திலும் அக்கொள்கை பின்பற்றப்பட்டுள்ளது. 2014ஆம் ஆண்டின் வட்டி வருமானத்தினைக் கணக்கு வைக்கும் போது விசாரணையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் குறித்து கவனஞ் செலுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

**2.3 சட்டதிட்டங்கள், நிபந்தனைகள் ஆகியவற்றுடன் இணங்காமை**

(அ) கணக்காய்வு விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு 2003 ஜுன் 02ஆந் திகதியிட்ட இல பிஈடி/12 கொண்ட பொது மயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2ஆம் பிரிவிற்கு இணங்க தற்காலிக மேலதிகப்

பணத்தினை முதலீடு செய்வதற்கு திறைசேரியின் அனுமதியினைப் பெறுவதற்காக தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதெனினும் அதற்கான அனுமதி இதுவரையில் கிடைக்கப் பெறவில்லை. (உரிய கடிதத்தின் பிரதி கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

எவ்வாறெனினும் 2012 ஆகஸ்ட் மாதம் 22ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் போது, குறுகிய கால மேலதிக நிதியங்கள் ஏழு நாள் கோரல் வைப்புக்களில் முதலீடு செய்வதற்குப் பதிலாக ஒரு பகுதியினை கூடிய வட்டி வருமானத்தைப் பெறுவதற்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (பொது முயற்சிகள் தொடர்பிலான பொதுக் கூட்டத்தின் குறிப்புக்களின் பிரதியொன்று இல ஆர்ரீ/பீ/என்ரீசீ/எவ்ஏ/2012/22 கொண்ட கணக்காய்வு விசாரணைக்கான பதிலுடன் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.)

(ஆ)

i. 2014ஆம் ஆண்டு முதல் உத்தியோகப்பூர்வமாக வெளிநாடு செல்லும் அலுவலர்களுக்கு கம்பளி ஆடைக் கொடுப்பனவினை வழங்கும் போது ரூபாவில் செலுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

ii. விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களின் கம்பளி ஆடைக் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்ட பணத்தியை மீள அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(இ)

i. நிதி நிபந்தனை 371 (2) (அ)

விசேட செயற்றிட்டத்தின் கீழ் நடாத்தப்படும் நிகழ்ச்சிகள் பெரும்பாலும் கொழும்பிலிருந்து தூர பிரதேசங்களில் நடைபெறும். மாவட்ட மட்டத்தில் ஒழுங்குசெய்யப்படும் நிகழ்ச்சிகளின் போது ஒரு நிகழ்ச்சியில் பெரும்பாலும் மிகக்கூடிய தொகையினர் பங்குபற்றுவர். நாள் முழுதும் நடைபெறும் இந்நிகழ்ச்சி ஒன்றிற்காக பங்குபற்றுவொருக்கு அனேகமாக தேநீர் (காலையில் மற்றும் மாலையில்), பகல் உணவு வழங்கப்படுவதுடன், அதற்கான செலவினை 20,000.00 ரூபா முற்பணத்தினால் ஈடுகொடுக்க முடியாதுள்ளது.

அவ்வாறே, நிறுவனம் மேற்கொள்ளவேண்டிய செலவுகளைக் குறைத்துக் கொள்வதற்காக (போக்குவரத்துச் செலவு போன்ற) அனேகமாக அருகாமையில் உள்ள மாவட்டங்களின் 02 அல்லது பல நிகழ்ச்சிகள் அடுத்தடுத்த தினங்களில் நடைபெறும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்நிகழ்ச்சிகள் பலவற்றிற்கு ஒரு முற்பணத்தினைப் பெற்றுக் கொள்வதும் முற்பணம் இவ்வாறு கூடிய பெறுமானத்தில் பெறுவதற்கு காரணமாக அமைகின்றது.
மேலும், இச்செயற்றிட்டங்களில் அலுவலர்கள் பலர் பங்குபற்றியபோதும், அவ்வாறு பங்குபற்றும் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் அலுவலர்களுக்கு முற்பணம் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதும், நிதி நிர்வாகத்தினை எளிதாக்கும் விதத்தில் பங்குபற்றும் எல்லா அலுவலர்க்கும் சார்பாக ஒரு அலுவலர் முற்பணத்தினைப் பெறுவதும் முற்பணம் இவ்வாறு கூடிய பெறுமானத்தில் பெறுவதற்கு காரணமாக அமைகின்றது.

எவ்வாறெனினும், இது வரையில் முற்பணம் செலுத்துகையில் முடியுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் காசோலை மூலம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், முற்பணத்திளைப் பெற்றுக்கொடுத்தலை மட்டுப்படுத்தல், உரிய பணி முடிவடைந்தவுடன் பற்றுச்சீட்டுக்களைத் தீர்ப்பதற்கு அறிவுறுத்துதல் ஆகியவற்றின் மூலம் விசாரணையில் குறிப்பிட்டுள்ள தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தயவுடன் அறிவிக்கின்றேன்.

2) நிதி நிபந்தனை 1646

ஓட்டக் குறிப்புப் புத்தகங்களைப் பேணுதலில் இருந்த சிக்கல் காரணமாக கணக்காய்வு திணைக்களத்திற்கு அறிவித்ததன் பின்னர் புதுக் குறிப்புப் புத்தகமொன்று தயார் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. எரிபொருள் பயன்பாடு குறித்து பரீட்சீக்கப்பட்டு தாங்கியில் எஞ்சியிருக்கும் அளவு தொடர்பில் அறிக்கையிடுவதற்குத் தேவையான தகவல்கள் மற்றும் பயிற்சி சாரதிகளுக்கு அவசியமாவதுடன், அதனை அறிவுறுத்தவதற்கு அவசியமான வளவாளர்களின் உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதுடன் கூடிய விரைவில் அந்நடவடிக்கை ஆரம்பிபக்கப்படவுள்ளது.

ஓட்டக் குறிப்புப் புத்தகத்தின் பிரதியொன்றினை பிரித்தெடுப்பதற்கு அச்சிடப்பட்டில்லாமையால் கணக்காய்வு திணைக்களத்தின் வேண்டுகோளின் படி தேவையான பகுதியை மாத்திரம் பிரதியெடுத்து வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3) நிதி நிபந்தனை 1647

நிறுவனத்தின் வாகனங்களுக்கு ஏற்படும் விபத்துக்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பில் குறிப்புப் புத்தகமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அது பாதுகாப்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளது.

(ஈ) எரிபொருள் பயன்பாடு குறித்து பதிவுகளை மேற்கொள்வதற்குப் பொருத்தமான அலுவலர் ஒருவரின் உதவி கூடிய விரைவில் பெற்றுக் கொள்வதற்கான அனுமதி பெறப்பட்டுள்ளது.

(உ) 2015ஆம் ஆண்டு ஜனவரி 15ஆந் திகதி முதல் எல்லா வாகனங்களிலும் அரச இலட்சினை மற்றும் நிறுவனத்தின் பெயர் வரையப்பட்டுள்ளன.

(ஊ) கணினி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பில் பிரத்தியேகமான சொத்துக்கள் ஆவணமொன்றினைப் பேணுவதற்கு கவனத்திற் கொள்ளப்பட்டது.

(எ) விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை சொத்துக்கள் ஆவணத்தில் உள்ளடக்குவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(ஏ) விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து கவனஞ் செலுத்துவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(ஐ)

(i) எதிர்காலத்தில் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் குறித்து கவனஞ் செலுத்துவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

(ii) கொள்வனவு வழிகாட்டு கையேட்டில் குறிப்பிட்டுள்ளவாறு எதிர்வரும் கொள்வனவு நடவடிக்கைகளின் போது அவ்வக் கொள்வனவு நடவடிக்கைகளுக்காகத் தயாரிக்கப்பட்ட கொள்வனவு நேர அட்டவணைக்கு கொள்வனவு கமிட்டியின் அனுமதியினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(III) இப்பயணிகள் தரிப்பிடத்திற்கான ஆகுசெலவு மதிப்பீடொன்று நிறுவனத்தின் பொறியியலாளரினால் தாயரிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றேன். அதன் பிரதியொன்று தாங்கள் 2014.10.14 ஆந் திகிதியிட்ட கணக்காய்வு தலைமை அதிபதி திணைக்களத்தினால் அனுப்பப்பட்டுள்ள கணக்காய்வு விசாரணை இல. ஆர்ரீ/பீ/என்ரீசீ/2013/ஏகிவு - 15/13இற்குப் பதிலளிக்கும் முகமாக தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை தயவுடன் அறிவிக்கின்றேன்.

(iv) கொள்வனவு வழிகாட்டிக் கயைெட்டில் குறிப்பிட்டுள்ளவாறு விலைமனு கோரலின் குறைந்தபட்ச கால எல்லை 21 நாட்களாயினும் 2013 தேசத்தின் மகுடம் கண்காட்சிக்கு

இத்தூருப் பயணச் சேவை பயணிகள் தரிப்பிடங்கள் சிலவற்றை அமைப்பதற்கு இருந்தமையால் இக்கால எல்லையினைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(v) எதிர்காலத்தில் ஒப்பந்த விசாரணையில் குறிப்பிட்டள்ள விடயங்கள் குறித்து கவனஞ் செலுத்துவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் வருடத்திற்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குவின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற இலாபம் 163,772,129 ரூபாவாகும். விசாரணையில் குறிப்படப்பட்டுள்ள நிறுவன, சட்ட, பத்திரிகை அறிவத்தல்கள், தேய்மானங்கள், வேறு செலவினங்களை கழித்ததன் பின் மேற்படி இலாபம் காட்டப்பட்டுள்ளது.

### 3.2 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள சட்டரீதியான நிகழ்வுகள்

(அ) வெளிவாரி 15 நிறுவனங்கள்/ நபர்களினால் நேர அட்டவணை, பயணிகள் சேவை அனுபதிப்பத்திரங்கள், பேருந்துக் கட்டண திருத்தங்கள், பேருந்துத்திரிப்பிட வசதிகள், பேருந்து ஊழியர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நீதிமன்றங்களில் வழக்குகள் 15 நிறுவனத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) 2013ஆம் ஆண்டினுள் நிறுவனத்தினால் பயணிகள் சேவை அனுமதிப்பத்திரமின்றி ஓடிய வாகனங்கள் தொடர்பில் நிதிமன்றங்களில் 10 வழக்குகள் பல்வேறு வெளிவாரி தரப்பினர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### (அ) கெமி செரிய சேவை

2013ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 21 கெமி செரிய சேவைகள் காணப்பட்டன. கிழக்கு மாகாணத்தில் 2 சேவைகள், தென் மாகாணத்தில் 2 சேவைகள், வடமேல் மாகாணத்தில் 14 சேவைகள் என ஆரம்பிக்கப்பட்டமையால் 2013 ஏப்பிரல் ஆகும் போது 39 சேவைகள் வரை அதிகரித்துக் கொள்ள முடிந்தது. 2014 ஜூலை ஆகையில் தென் மாகாணத்தில் புதிய சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், சேவைகள் எண்ணிக்கை 40 ஆகும். மாகாண போக்குவரத்து அதிகார சபைகளின் ஆதரவு கிடைக்காமை, ஜீ.பி.எஸ். பதிவுகளின் படி செயற்பாடாமை, பதிவுப்புத்தகப் (log) பத்திரங்கள் கிடைக்காமை ஆகியவற்றால் 09 சேவைகள் மற்றும் காலம் முடிவடைந்தமையால் 1 சேவை இரத்துச் செய்யப்பட்டது. அதன் பிரகாரம் 30 சேவைகள் கொண்ட 2013 ஒக்டோபர் மாதத்தில் தென் மாகாணத்தில் புது சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டு இறுதியாகையில் 31 சேவைகள் காணப்பட்டன. கேள்விப்பத்திர கோரல்கள் மூலம் அனுமதிப்பத்திரங்கள் பல வழங்கப்பட்ட போதிலும், பலவும் சேவைகளை ஆரம்பிக்காமலே கைவிட்டதானால் 2013இல் சேவைகளின் எண்ணிக்கை குறைவதற்கு ஏதுவாயின.

2013ஆம் ஆண்டிற்குள் கிழக்கு மாகாணத்தில் 7 சேவைகள் சார்பாக கேள்வி மனு கோரப்படினும் கிழக்கு மாகாண அதிகாரசபையினூடாக ஒரு செயற்பாட்டாளரிடமிருந்தே தகவல்

கிடைக்கப் பெற்றிருந்தது. இதனால் ஒரு சேவை மாத்திரமே ஆரம்ப்பிக்கப்பட முடியுமாயிருந்தது.

2012ஆம் ஆண்டு முடிவடைகையில் வடமத்திய மாகாணத்தினுள் 06 கெமி செரிய சேவைகள் செயற்படுத்தப்பட்டு 2013ஆம் ஆண்டின் போது 03 வரை குறைவடைந்தது. ஜீ.பி.எஸ். மூலமாக பரீட்சிக்கும் போது செயற்பாடுத்தப்படாமை மற்றும் பதிவுப்புத்தகப் (log) பத்திரங்கள் கிடைக்காமை காரணமாக் 03 சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

வருடாந்தம் புது சேவையொன்றினை ஆரம்பித்த போதிலும், குறிப்பிட்டபடி சேவைகளை வழங்காமை உறுதிப்படுத்தப்பட்டவற்றை இரத்துச் செய்ய வேண்டி ஏற்பட்டதால் மற்றும் மாகாண போக்குவரத்த அதிகாரசபைகளினால் இச்சேவையினை மேற்கொள்கொள்வதற்கு கிடைக்கும் ஆதரவு போதாமையினால் புது சேவைகளை ஆரம்பிப்பது குறைவடைந்துள்ளமைக்கு ஏதுவாக உள்ளன.

**(ஆ) நிசி செரிய சேவை**

2012ஆம் ஆண்டு இறுதியில் 123 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டன. வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் போதியளவாக இல்லாமையினால் புது சேவையொன்றினை ஆரம்பிப்பதற்கு முடியுமாக இருந்தது 42 மாத்திரமே. வருட இறுதியின் போது 111 பேருந்துகளினால் 136 சேவைகள் செய்ற்படுத்தப்பட்டிருந்தமை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நடமாடும் பரிசோதணை அலுவலர்கள் இச்சேவைகளை அடிக்கடி பரிசோதனை செய்து வழங்கும் அறிக்கையின் படி செயற்படுத்தப்படாத சேவைகளை இரத்துச் செய்தல் மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிபந்தனைகளின் படி செயற்படுத்தப்படாத சேவைகளை இரத்துச் செய்தல் ஆகியவற்றினாலாகும்.

இச்சேவைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளும்படி அவ்வவ் டிப்போக்களுக்கு இச்சேவைகளை கட்டாயமாக செயற்படுத்தும் படி அறிவித்து அறிவுறுத்தற் கடிதங்கள் அனுப்பப்ட்டுள்ளன. அவ்வாறே இலங்கை போக்குவரத்துச் சபை பிரதான அலுவலகமும் எப்பொதும் அறிவுறுத்தப்படட்டுள்ளது.

(இ) பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதன் காரணமாக இப்பணியினை நிறைவேற்றுவதற்கு தாமதமாகியது.

**(ஈ) நெடுந்தூர பயணச் சேவைகளுக்காக பயணிகள் கொட்டில்களை அமைத்தல்**

விசாரணையில் குறிப்பிட்டுள்ளபடி, செயற்படு திட்டத்தின் பிரகாரம் மேற்படி செயற்றிட்டத்திற்கு 100 நெடுந்தூரப் பயணச் சேவைகளுக்காக பயணிகள் கொட்டில்களை அமைப்பதற்கு 35,000,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், செயற்படு திட்டத்தின் படி இச்செயற்றிட்டத்திற்காக 35 நெடுந்தூரப் பயணச் சேவைகளுக்காக பயணிகள் கொட்டில்களை அமைப்பதற்காக 10,000,000 ரூபா தொகையே ஒதுக்கப்பட்டிருந்தது.

25 பயணிகள் கொட்டில்களை அமைப்பதற்கு கேள்விமனு கோரல் வழங்கப்பட்டிருந்த போதும் அதில் பூர்த்திசெய்யப்பட்ட 13 பயணிகள் கொட்டில்களுக்கு மாத்திரமே பணம் செலுத்தப்பட்டது. இப்பயணிகள் கொட்டில்கள் 13 பெந்தர கஹம்பிலியாகந்த சந்தியிலிருந்து கதிர்காமம் வரையில் செயற்படுத்தப்படுகின்றதுடன், தென் மாகாண அபிவிருத்தி முன்னேற்ற அறிக்கை மீளாய்வுக் கூட்டத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் திரு நாமல் இராஜபக்ஷ அவர்களால் கட்டுமான பணிக்ளை நிறுத்தமாறு திடீரென அறிவிக்கப்பட்டமையால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவரால் கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

## 4.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

(அ) கேள்விமனு கோரல் 17 பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் 10 பாதைகளுக்கான 12 பயணவழி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு விலைமனு கோரப்பட்டது. பணிப்பாளர் சபையின் அனுமதிக்கிணங்க எல்லா பாதைகளுக்காகவும் விலைமனு கோரப்படினும் 2 பயணவழி அனுமதிப்பத்திரங்களே வழங்கப்பட்டன. இக்கேள்விமனுவின் கீழ் அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பேருந்துச் செயற்பாட்டாளர்கள் முன்வராமை மற்றும் முன்வந்நவர்களில் தகுதியான விண்ணப்பதாரிகள் இருக்காமை ஆகிய காரணங்களால் இரண்டு அனுமதிப்பத்திரங்களை மாத்திரம் வழங்க நேரிட்டது.

(ஆ) பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்று 06 பாதைகளுக்காக கேள்விமனு கோரியும் குறிக்கப்பட்ட விலையின் பிரகாரம் பயணவழி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு பேருந்துச் செயற்பாட்டாளர்கள் முன்வராமை காரணத்தினால் 4 பயணவழி அனுமதிப்பத்திரங்களை மாத்திரம் வழங்க நேரிட்டது.

(இ) கொழும்பு – குச்சவெளி பாதைக்காக பயணிகள் அனுமதிப்பதிப்பத்திரம் வழங்கும் போது முதலாவது விலைமனுதாரர் பயணவழி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளாமையினால் இரண்டாவது விலைமனுதாரருக்கு பயணவழி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டது. எனினும் இரண்டாவது மனுதாரர் முதலாவது மனுதாரரின் விலையினைச் செலுத்தவதற்கு மறுப்புத் தெரிவித்ததனால் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் இரண்டில் முன்வைக்க நேரிட்டது. பணிப்பாளர் சபைக் கூட்டம் மாதாந்தம் நடைபெறுவதனால் இதற்கான அனுமதியைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டது.

எதிர்காலத்தில் இவ்வகைத் தாமதிப்பினைத் தவிர்ப்பதற்கு விலைமனு கோரலின் போது கேள்விமனு பிணை ஒன்றினை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறே பயணவழி அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு முன்வராத செயற்பாட்டாளர்களின் பெயர்களைக் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) 2012ஆம் ஆண்டில் கொள்வனவ செய்யப்படவேண்டிய 1500 மிதிவண்டிகளே 2013 மார்ச் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்டன. அதன்படி கொள்வனவு நடவடிக்கைகள் 2012ஆம் ஆண்டில் ஒக்டோபர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்கு 3 நிறுவனங்கள் முன்வந்த போதும் அதிகுறைந்த விலையினை முன்வைத்த நிறுவனம் கேள்விமனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பூரணப்படுத்தாமையால் அடுத்து தகுதிகளைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்து 1500 மிதிவண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டன. மிதிவண்டிகளுக்கான திடீர் கேள்வி அதிகரித்தமையால் இக்கேள்விமனுகோரலில் மீண்டும் அணவல் செய்தல் என்பதன் கீழ் மீண்டும் 750 மிதிவண்டிகள் என்பதாக அதாவது 2250 மிதிவண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டன.

இதற்கு முன்னர் குறித்த வழங்குனரான நிறுவனத்தின் மிதிவண்டிகளை விநியோகிக்கையில் ஏற்பட்ட குறைபாடுகள் தொடர்பில் அவர்கள் அறிவுறுத்தப்பட்டதுடன், இவ்வாறான தவறுகள் ஏற்படின் குறித்த நிறுவனத்தினை கறுப்புப் பட்டியலில் உள்ளடக்குவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

அவ்வாறே குறித்த மிதிவண்டிகள் சரியாக குறைபாடுகளின்றி கிடைக்கப் பெற்றமைக்கு உரிய இடங்களில் மிதிவண்டிகளைப் பெற்றுக் கொள்ளும் அலுவலர்களினால் உறுதிப்படுத்தும் கடிதங்கள் முள்வைக்கப்பட்டதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட மிதிவண்டிகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதுடன், 2014ஆம் ஆண்டு முதல் பிரத்தியேகமான மொத்தப் புத்தகங்களில் குறித்துக்கொள்ளுவதோடு மிதிவண்டிகளின் விபரக்குறிப்புக்கள் பரிசீலனை செய்யப்பட்டன.

மிதிவண்டிகளின் நியமங்களின் பிரகாரம் பிள்ளைகள் தெரிவுசெய்யப்படுவதுடன், மிதிவண்டிகளை வழங்குவதற்கு முன்னர் பிள்ளைகளுக்கு மிதிவண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்பத்திரமொன்று வழங்கப்படும். அவ்விண்ணப்பப்பத்திரம் மூலம் பிள்ளைகளின் விபரங்களை அறிந்துகொள்வதுடன், அதனை அப்பிள்ளையினது பெற்றோர்,

வகுப்பாசிரியர், அதிபர் ஆகியோரினால் உறுதிப்படுத்தப்பட்டு குறித்த விண்ணப்பப்பத்திரத்தில் பிள்ளையின் கையொப்பமும் பெறப்படுவதன் மூலம் பிள்ளை மிதிவண்டியைப் பெற்றுக்கொண்டதாக அதன் மூலம் உறுதிப்படுத்தக் கொள்ளலாம்.

அவ்வாறே மிதிவண்டிகளை வழங்கும் வைபவத்தின் போது மிதிவண்டிகளைப் பெற்றுக்கொடுக்கும் விண்ணப்பப்படிவத்தினைப் பிள்ளை முன்வைதத்தன் பின்னர் மிதிவண்டியினை வழங்குவதுடன், பிரத்தியேகமான பெயர் பட்டியலொன்றில் பிள்ளைகளின் கையொப்பத்தினைப் பெற்றுக்கொள்வது வைபத்தின் போது மிகவும் கடினம் காரியம் என்பதால் குறித்த விண்ணப்பப்படிவத்தினை முன்வைத்த பின்னர் அவர்கள் முன்வைக்கும் தகவல்களின் படி குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்திற்கு மற்றும் அதிபர்களினால் மிதிவண்டிகளைப் பெற்றுக் கொண்டதாக உறுதிசெய்யப்படும். எனினும் 2014ஆம் ஆண்டு முதல் பிள்ளைகளின் கையொப்பமும் பெற்றுக்கொள்வது மேற்கொள்ளப்படுகின்றது.

## 4.3 <u>கருத்து முரண்பாட்டினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்கள்</u>

(அ) கணக்காய்வு விசாரணையில் கேட்கப்பட்ட 2013ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்கள் இரண்டினை வழங்குவதற்குவதற்கு பணிப்பாளர் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களின் படி 2013 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்படு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற இலாபம் 163,772,129 ரூபாவாகும்.

அதன் படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிக் குழாத்தினருக்கு மேற்படி குறிப்பிட்டுள்ளவாறு செயற்படு நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கப் பெற்ற இலாபத்தினை அடிப்படையாகக் கொண்டே ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்துப்பட்டுள்ளன என தயவுடன் அறியத் தருகின்றேன்.

## 4.4 பொருளாதார இலாபமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கொட்டாவை – மாத்தறை அதிவேகப்பாதை அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக 2013 ஆகஸ்ட் மாதம் 06ஆந் திகதி பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட போதிலும், அதிவேகப் பாதையில் பேருந்துச் செயற்பாட்டிற்கான அனுமதிப்பத்திரம் தொடர்பில் புது கொள்கையொன்றினைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை கலந்துரையாடல் ஒன்றினை நடாத்துவதற்கு இருப்பதாக அறிவித்தமையால் விண்ணப்பப்படிவம் வழங்குதல் இடைநிறுத்தப்பட்டது.

எவ்வாறெனினும் உரிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் 2014 ஒக்டோபர் மாதமாகையில் குறித்த அனுமதிப்பத்திரம் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 4.5 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

### (அ) தலவாக்கலை பேருந்துத் தரிப்பிடத்தை அமைத்தல்

i) இச்செயற்றிட்டத்தின் ஆரம்ப அனுமதியினைப் பெறல் தலவாக்கலை நகர சபையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்ட போதும் விலைமனு கோரலின் போதும் கொடுப்பனவகளின் போதும் அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடே பயன்படுத்தப்பட்டது. எனினும் தலவாக்கலை நகர சபையினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு, இல Ntc/DG/CM/35/16 கொண்ட கோவையின் பக்க இல. 105இன் கீழ் கோவைப்படுத்தப்பட்டுள்ளது.

ii) மேலதிக வேலைகளுக்கான ஆரம்ப அனுமதி அரச பொறியியற் கூட்டுத்தாபனத்தினால் ஆணைக்குழுவிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

iii) தலவாக்கலை பேருந்துத் தரிப்பிடத்தில் தரை ஓடு பதித்தல் பின்னர் பரிந்துரைக்கப்பட்டதால் அப்பணி பூர்தியாகும் வரை மின் உபகரணங்கள் மற்றும் மலசலகூட உபகரணங்களைப் பொருத்துதல் மற்றும் பூச்சு பூசுதல் என்பனவற்றை செய்யக்கூடாது என நிறுவனத்தினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ)

i) நேர அட்டவணைப் பலகைகளைப் பொருத்துவதற்கான தீர்மானம் 2011ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்தில் எடுக்கப்பட்ட போதும், இந்நேர அட்டவணைப் பலகைகளுக்கு எத்தொழில்நுட்ப முறையினைப் (Software, Led) பின்பற்றுவது என்பதும், அப்போது Led தொழில்நுட்பம் சந்தைக்கு வந்த ஆரம்ப காலகட்டம் என்பதால் அதற்குரிய தொழில்நுட்ப விபரங்களைத் தயாரிப்பதற்கு நீண்ட காலம் எடுத்தது.

இதற்கான கொள்வனவு நேர அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டதுடன், எதிர்வரும் கொள்வனவு நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கதாக மேற்கொள்வதற்கு கொள்வனவு நேர அட்டவணைக்கு இணங்க மேற்கொள்வதற்கு உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தயவுடன் தெரிவிக்கின்றேன்.

ii) குறைந்தளவு விலையினை வழங்கும் நிறுவனம், அனுபவம் தவிர எல்லா விபரங்களும் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. மேலும், குறைந்தளவு விலை மற்றும் அனுபவத்துடன் கூடிய விலை ஆகியவற்றிற்கு இடையிலான வித்தியாசம் 5,268,130.00 ரூபா ( 9,039,556.00ரூபா- 3,771,426.00ரூபா 5,268,130.00 =ரூபா)

மேலும் இத்தொகை மதிப்பீட்டுத் தொகையை விடத் தாண்டிச் செல்வதாக உள்ளது. அதனால் குறைந்தளவு விலையினை முன்வைத்த நிறுவனம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கமிட்டியின் சிபாரிசின் பேரில் நிறுவனத்திற்கு அழைக்கப்பட்டு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கமிட்டியின் மற்றும் கொள்வனவு கமிட்டி தலைவரின் முன்னால் முன்வைத்தலை )Presentation) செய்ததன் பின்னர், (இணைப்பு 1a) உரிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொண்டதன் பின்னர், அதற்குரிய விடயங்களை எழுத்து மூலமாகப் பெற்றுக்கொண்டு (இணைப்பு 11a) தொழில்நுட்ப மதிப்பீட்டு கமிட்டியின் பரிந்துரைப்பு மற்றும் கொள்வனவுக் கமிட்டியின் அனுமதியுடன் (இணைப்பு 111a, iv a) கேள்விமனு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

iii) இலத்திரனியல் காட்சிப் பலகை ஒன்றினைக் கொள்வனவு செய்வதற்கு உரிய வழங்குனரிடம் 2012.12.31ஆந் திகதி கொள்வனவு ஒப்பந்தத்தினை வழங்கிய போதும் உரிய நிறுவனம் இலத்திரனியல் காட்சிப் பலகையினைப் பொருத்துவதற்கான ஆரம்பப் பணிகளையேனும் மேற்கொள்ளாமையினால் குறித்த அணவல் இரத்துச் செய்யப்பட்டது.

இவ்விலத்திரனியல் காட்சிப் பலகைகள் தொடர்பில் 2013.05.10ஆந் திகதி தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் எடுத்த தீர்மானம் மற்றும் அறிவுறுத்துகைக்கு இணங்க நம்பிக்கைமிகு அரச நிறுவனமான வரையறுக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தகக் (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்திலிருந்து விலைமனு கோரப்பட்டதுடன், இந்நிறுவனம் ஏற்கனவெ இலத்திரனியல் காட்சிப் பலகைகளைப் பொருத்துவதில் அனுபவமிக்க அரச நிறுவனமாகையால் வரையறுக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தகக் (பல்நோக்கு) கூட்டுத்தாபனத்திடம் இக்கேள்விமனுவினை வழங்கியதாகத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

iii) இச்செயலாற்றுகைப் பிணை முடிவடையும் நாள் 2013.04.06ஆந் திகதியாகும். இச்செயலாற்றுகைப் பிணை காலாவதியாகும் திகதியொன்று இருக்கையில் செயலாற்றுகைப் பிணையினை விடுவிக்க வேண்டாம் என உரிய வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு அறிவிக்கப்பட்ட நிலையில் இச்செயலாற்றுபைப் பிணையினை பணமாக மாற்றுவதை குறித்த வங்கி மறுத்துள்ளதால் அட்டர்னி ஜெனரல் திணைக்களத்தில் சட்ட ஆலோசனைப் பெறுவதற்கு இவ்விடயம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதைத் தயவுடன் அறிவித்துக் கொள்கின்றேன்.

**4.6 பணிக்குழாத்தினர் நிர்வாகம்**

இதுவரையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் புதிய பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்பு படிமுறைகளுக்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதால் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**4.7 ஏனைய அரச நிறுவனங்களுக்குப் வழங்கப்பட்ட ஆணைக்குழுவின் வளங்கள்**

(அ) இலங்கை போக்குவரத்துச் சபையினால் 2014.12.16ஆந் திகதியாகையில் இந்த 118,771.00 ரூபா தொகை மீளளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) கௌரவ தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சரின் எழுத்துமூல வேண்டுகோளின் படி நுவரெலியா மாவட்டத்தினுள் செயற்படுத்தப்படும் பேருந்துகள் குறித்து அவ்வமைச்சிற்குக் கிடைக்கப் பெறும் முறைப்பாடுகளைப் பரிசீலிப்பதற்காக ஆணைக்குழுவிற்குரிய வேன் வண்டியொன்று 2013 ஜுன் 13ஆந் திகதி முதல் 2013 ஜுலை 15ஆந் திகதி வரை விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாகனத்திற்கான எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்க்கு 40,410.00 ரூபா மற்றும் சேவைக் கட்டணமாக 15,960 ரூபா அம்மாதத்தினுள் கௌரவ அமைச்சர் அவர்களின் நுவரெலியா ஒருங்கிணைப்பு அலுவலகத்தினால் செலவிடப்பட்டுள்ளது. உரிய பணி ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றென்பதால் அப்பணத்தொகை நுவரெலிய மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலகத்திற்கு மீளளிக்கப்பட்டது.

**5.2 வரவுசெலவுப் பேரேட்டு நிர்வாகம்**

விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பாதீட்டு எண்களுக்கும் உண்மையான எண்களுக்கும் இடையில ஒப்பிடும் போது ஏழு நாள் அழைப்புவைப்பு மீதான வட்டி வருமானம் நூற்றுக்கு 1080 ஆகவும் மாறியுள்ளது.

எதிர்வரும் ஆண்டில், விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் உண்மையான நிலுவைகளுக்கு இடையில் வேறுபாடுகளைக் குறைத்துக் கொள்வதில் கவனஞ் செலுத்துவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.

**5.3 வருடாந்த அறிக்கைகளை சமர்ப்பித்தல்**

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2012 வருடாந்த அறிக்கைக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக 2014.09.05ஆந் திகதி தனியார் போக்குவரத்துச சேவைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகள் குறித்து விசேட கவனஞ் செலுத்துவதற்கு அவதானத்திற் கொள்ளப்பட்டது.